# ஏனோக்கு

முதல் புத்தகம் – பரலோக புத்திரர்கள்

மொழியாக்கம்

சுஜித் – ரெமினா சுஜித்



கிறிஸ்தவ வரலாற்று சங்கம்

# Book Of Enoch

---

*First Book : The Book of Watchers*

**From Qumran Dead Sea Scrolls**

*Dating from the third century BCE to the first century CE*

***Translated By:***

**Mr. Sujith & Mrs. Remina Sujith**

# ஏனோக்கின் புத்தகம்

---

## முதல் புத்தகம் : பரலோக புத்திரர்களின் புத்தகம்

**கும்ரான் மற்றும் சவக்கடல் சுருள்களில் இருந்து**

காலம் : கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரை

**மொழிபெயர்ப்பு**

திரு. சுஜித் & திருமதி. ரெமினா சுஜித்

The Book of Enoch - First Book : The Book of Watchers
Translated by Mr. Sujith S & Mrs. Remina Sujith

Copyright © 2024 by Christian Historical Society
All rights reserved.

First Edition, 2024

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior written permission of the publisher.

Cover Design : Remina Sujith
Interior Design : Sujith S

Published by: Christian Historical Society
2-2-3(4), North Street, Bungalow Surandai-627859

christianhistoricalsociety.in

This E - Book Not for Sale

*To Almighty,*
*who taught us to question everything*
*and never stop learning.*

***"You are the light of the world. A town built on a hill cannot be hidden. Neither do people light a lamp and put it under a bowl. Instead they put it on its stand, and it gives light to everyone in the house."***

***- Beloved***

## ஏனோக்கின் புத்தகத்தைப் பற்றி

ஏனோக்கின் புத்தகம் (முதலாம் ஏனோக்கு என்றும் அறியப்படுகிறது) ஆரம்ப காலகட்டத்தில் யூதர்களாலும் கிறிஸ்தவர்களாலும் போற்றப்பட்டது. ஆனால் பின்னர் யூத. கிறிஸ்தவ போதகர்கள் இதை ஏற்க மறுத்தனர். ஏனெனில் விழுந்துபோன தூதர்களின் இயல்பையும் செயல்களையும் குறித்த சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இதில் இருந்தன.

ஏனோக்கின் எழுத்துக்களும், வேதாகமத்திலிருந்து நீக்கப்பட்ட (அல்லது தொலைந்துபோன) பல எழுத்துக்களும் (எடுத்துக்காட்டாக, தோபித்தின் புத்தகம், எஸ்திராஸ் போன்றவை) ஆதிகால சபையின் பெரும்பாலான தந்தையர்களால் **அபோக்கிரிபா** எழுத்துக்களாக அங்கீகரிக்கப்பட்டன. **அபோக்கிரிபா** என்ற சொல் கிரேக்க மொழியில் **மறைக்கப்பட்டது** அல்லது **இரகசியமானது** என்று பொருள்படும்.

முதலில், இந்த சொல் ஒரு புகழ்ச்சி நிறைந்த பயன்படுத்தப்பட்டது. பொதுமக்களுக்கு வெளிப்படுத்த முடியாத உயர்ந்த உண்மைகளைக் கொண்ட புனித புத்தகங்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டது.

தானியேல் 12:9-10இல், காலத்தின் முடிவுவரை மூடி முத்திரை போடப்பட்ட வார்த்தைகளையும், ஞானிகள் புரிந்துகொள்வார்கள் ஆனால் துன்மார்க்கர் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்ற வார்த்தைகளையும் நாம் காண்கிறோம். மேலும், 4 எஸ்ரா 14:44 முதலான வசனங்களில் 94 புத்தகங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் 24 புத்தகங்கள் (பழைய ஏற்பாடு) வெளியிடப்பட வேண்டும், 70 புத்தகங்கள் மக்களில் ஞானிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கால ஓட்டத்தில் படிப்படியாக, **அபோக்கிரிபா** என்ற சொல் இழிவான பொருளைப் பெற்றது. ஏனெனில் இந்த மறைக்கப்பட்ட புத்தகங்களின் வேத உண்மைகள் பெரும்பாலும் சந்தேகத்திற்குரியதாக இருந்தன. ஓரிஜன் (மத்தேயு விளக்கவுரை 10.18; பக்கம் 13.881) பொது ஆராதனையில் வாசிக்கப்பட வேண்டிய புத்தகங்களுக்கும் அபோக்கிரிபா புத்தகங்களுக்கும் வித்தியாசம் காட்டினார்.

இந்த இரகசிய புத்தகங்கள் பெரும்பாலும் விசுவாசிகளின் உள் வட்டத்தில் பாதுகாக்கப்பட்டதால், விமர்சன மனப்பான்மை கொண்ட சபைத் தந்தையர்கள் பலர் புரிந்துகொள்ள முடியாமல் போனார்கள். எனவே அவர்கள் வாசிக்கத் தடை செய்யப்பட்ட நூல்களுக்கு **அபோக்கிரிபா** என்ற பெயரைச் சூட்டினார்கள்.

புராட்டஸ்டன்ட் பேச்சு வழக்கில், அபோக்கிரிபா என்பது 15 நூல்களைக் குறிக்கிறது. ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் யூத மூலமாகவும், செப்துவஜிந்து மொழிபெயர்ப்பில் காணப்படுபவையாகவும் உள்ளன (2 எஸ்திராஸின் சில பகுதிகள் கிறிஸ்தவ மற்றும் லத்தீன் மூலமானவை). இவற்றில் சில பாலஸ்தீனாவில் அராமிக் அல்லது எபிரெய மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட யூத வேத நூல்களில் இவை சேர்க்கப்படவில்லை.

சீர்திருத்தவாதிகள், பழைய ஏற்பாட்டின் யூத வேத நூல்களால் தாக்கம் பெற்று, இந்த புத்தகங்களை மற்ற வேத வாக்கியங்களுக்கு இணையாகக் கருதவில்லை. எனவே புராட்டஸ்டன்ட் வேதாகமத்தில் அபோக்கிரிபாவை தனிப் பிரிவாக வைக்கும் வழக்கம் ஏற்பட்டது, கால ஓட்டத்தில் முற்றிலும் விட்டுவிடப்பட்டது.

திரெந்து சபை கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட கத்தோலிக்க பார்வையின்படி, இந்த 15 நூல்களில் 12 நூல்கள் (வேறுவிதமான எண்ணிக்கையில்) வேத வாக்கியங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவை இரண்டாம்நிலை வேத நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன.

புராட்டஸ்டன்ட் அபோக்கிரிபாவில் உள்ள மூன்று புத்தகங்களை கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவை 1-2 எஸ்திராஸ் மற்றும் மனாசேயின் ஜெபம் ஆகியவை.

விழுந்துபோன தூதர்களின் இயல்பையும் செயல்களையும் பற்றிய ஏனோக்கின் புத்தகத்தின் கருத்துக்கள் பிற்கால சபைத் தந்தையர்களை மிகவும் கோபப்படுத்தியது. அவர்களில் ஒருவரான பிலஸ்திரியஸ் இதை வெளிப்படையாக கிறிஸ்தவசார்பற்றவை என கண்டனம் செய்தார்.

தூதர்களைப் பற்றிய இப்புத்தகத்தின் போதனையை ரபீக்களும் நம்ப மறுத்தனர். இரண்டாம் நூற்றாண்டில் ரபீ சிமியோன் பென் ஜோகாய் இதை நம்புகிறவர்கள் மீது சாபம் கொடுத்தார். எனவே இப்புத்தகம் கண்டிக்கப்பட்டது, தடை செய்யப்பட்டது, சபிக்கப்பட்டது, சந்தேகமின்றி எரிக்கப்பட்டு கிழிக்கப்பட்டது - இறுதியாக ஆயிரம் ஆண்டுகளுக்கு காணாமல் போய் (வசதியாக மறக்கப்பட்டது). ஆனால் ஆச்சரியமான முறையில், ஏனோக்கின் புத்தகம் இருநூறு ஆண்டுகளுக்கு பின் மீண்டும் புழக்கத்திற்கு வந்தது.

1773இல், இப்புத்தகத்தின் ஒரு பிரதி இருப்பதாக கேள்விப்பட்ட ஸ்காட்லாந்து ஆய்வாளர் ஜேம்ஸ் புரூஸ் தொலைதூர எத்தியோப்பியாவுக்குச் சென்றார். கேள்விப்பட்டபடியே, ஏனோக்கின் புத்தகம் எத்தியோப்பிய திருச்சபையால் பாதுகாக்கப்பட்டிருந்தது. அவர்கள் இதை வேதாகமத்தின் மற்ற புத்தகங்களோடு சேர்த்து வைத்திருந்தனர். புரூஸ் ஒன்றல்ல, மூன்று எத்தியோப்பிய பிரதிகளைப் பெற்று ஐரோப்பாவிற்கும் பிரிட்டனுக்கும் கொண்டு வந்தார்.

1821இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் எபிரெய பேராசிரியர் டாக்டர் ரிச்சர்ட் லாரன்ஸ் இதன் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட்டபோது, நவீன உலகம் ஏனோக்கின் தடை செய்யப்பட்ட மர்மங்களை முதன்முதலாகக் கண்டது.

பெரும்பாலான அறிஞர்கள் கூறுவது என்னவெனில், ஏனோக்கின் புத்தகத்தில் உள்ள கதையின் தற்போதைய வடிவம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது,மற்றும் குறைந்தது ஐந்நூறு ஆண்டுகளுக்கு இந்த எழுத்துக்கள் பிரபலமாக இருந்தது. முதல் எத்தியோப்பிய உரை ஏனோக்கின் புத்தகத்தின் கிரேக்க கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது, அதுவும் ஒரு பழைய உரையின் பிரதியாகும். அசல் செமிடிக் மொழியில், தற்போது அராமிக் என்று கருதப்படும் மொழியில் எழுதப்பட்டிருந்தது.

இது கிறிஸ்துவுக்குப் பிந்தைய காலத்தது என்று ஒரு காலத்தில் நம்பப்பட்டது (கிறிஸ்தவ சொற்களுக்கும் போதனைகளுக்கும் உள்ள ஒற்றுமை மிக அதிகமாக உள்ளது). ஆனால் குமரானில் கண்டெடுக்கப்பட்ட

சவக்கடல் சுருள்களில் இப்புத்தகத்தின் பிரதிகள் காணப்பட்டதால், இயேசு கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பே இப்புத்தகம் இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டது. ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு கும்ரான் பிரதிகளுக்கு அடிப்படையாக இருந்த அசல் எழுத்துக்களின் காலம் மறைபொருளாக உள்ளது. ஒரே வார்த்தையில் சொல்வதென்றால், இது மிகப் பழமையானது.

ஆதியாகமத்தின் கால வரிசைப்படி பார்க்கும்போது, பழைய வேதாகம காலத்து முன்னோரான ஏனோக் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அவருக்கு பின்னர்தான் இந்த புத்தகம் முதன்முதலில் தோன்றியது. எனவே இப்புத்தகத்தில் உள்ளவை உண்மையில் பழைய ஏனோக்கின் சொந்த வார்த்தைகள் அல்ல என்பது வரலாற்றாசிரியர்களின் பொதுவான கருத்தாக இருந்து வந்துள்ளது. எனினும் இப்புத்தகத்தில், வரும் தலைமுறைகளுக்காக இந்த புத்தகங்களை பாதுகாக்குமாறு அவர் தன் மகன் மெத்தூசலாவுக்கு கட்டளையிடுகிறார். இது காலப்போக்கில் தொலைந்து போகாமல் இருக்க அவர் எழுதிய புத்தகங்களை பிரதி எடுக்க வேண்டும் என்ற அழைப்பாகும்.

இதன் தெரியாத தோற்றம் இருந்தபோதிலும், கிறிஸ்தவர்கள் ஒரு காலத்தில் ஏனோக்கின் புத்தகத்தின் வார்த்தைகளை உண்மையான வேத வாக்கியங்களாக ஏற்றுக்கொண்டனர். குறிப்பாக விழுந்துபோன தூதர்களைப் பற்றியும், அவர்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பைப் பற்றியும் கூறும் பகுதிகளை ஏற்றனர். உண்மையில், இயேசு கிறிஸ்து பயன்படுத்திய முக்கிய கருத்துக்கள் பல ஏனோக்கின் புத்தகத்தில் உள்ள சொற்களோடும் கருத்துக்களோடும் நேரடியாகத் தொடர்புடையவையாக தோன்றுகின்றன. எனவே, இயேசு இப்புத்தகத்தை படித்திருந்தார் என்பதை மட்டுமல்லாமல், வரப்போகும் ராஜ்யத்தைப் பற்றிய குறிப்பிட்ட விளக்கங்களையும், துன்மார்க்கர் மீது இறங்கும் தவிர்க்க முடியாத நியாயத்தீர்ப்பின் கருப்பொருளையும் ஏற்று விரிவுபடுத்தும் அளவுக்கு இதை மதித்தார் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. (துன்மார்க்கர் என்ற சொல் பழைய ஏற்பாட்டில் காவலாளர்களை (தள்ளப்பட்ட தூதர்கள்) விவரிக்க மிக அதிகமாக பயன்படுத்தப்பட்ட சொல்.)

கிறிஸ்து ஏனோக்கின் புத்தகத்தை அங்கீகரித்தார் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டில் நூறுக்கும் மேற்பட்ட

வாக்கியங்கள் ஏனோக்கின் புத்தகத்தில் உள்ள முன்னுதாரணங்களைக் கொண்டுள்ளன. ஆதிகால கிறிஸ்தவர்கள் ஏனோக்கின் புத்தகத்தை ஏற்றுக்கொண்டதற்கான மற்றொரு குறிப்பிடத்தக்க ஆதாரம் பல ஆண்டுகளாக வேதாகமத்தின் லூக்கா 9:35இன் தவறான மொழிபெயர்ப்பின் கீழ் புதைந்திருந்தது. இது கிறிஸ்துவின் மறுரூப மாற்றத்தை விவரிக்கிறது: **அப்பொழுது: இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று**

இங்கு மொழிபெயர்ப்பாளர் மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில் உள்ள ஒத்த வசனத்தோடு இந்த வசனத்தை ஒத்துப்போகச் செய்ய விரும்பியதாகத் தெரிகிறது. ஆனால் லூக்காவின் வசனம் அசல் கிரேக்க மொழியில் இவ்வாறு வாசிக்கிறது: இவர் என்னுடைய குமாரன், தெரிந்துகொள்ளப்பட்டவர் (கிரேக்க மொழியில் ho eklelegmenos, நேரடி அர்த்தம் **தெரிந்துகொள்ளப்பட்டவர்**): இவருக்குச் செவிகொடுங்கள். **தெரிந்துகொள்ளப்பட்டவர்** என்பது ஏனோக்கின் புத்தகத்தில் மிக முக்கியமான சொல் (பதினான்கு முறை காணப்படுகிறது).

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் இப்புத்தகத்தை அறிந்திருந்தார்கள் என்றால், மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப்போகிற தெரிந்துகொள்ளப்பட்டவரையும், அவர்கள் நடுவில் வாசம்பண்ணப்போகிற தெரிந்துகொள்ளப்பட்டவரையும் பற்றிய விரிவான விளக்கங்களோடு, மேகத்திலிருந்து வந்த சத்தம் அப்போஸ்தலர்களிடம் இவர் என்னுடைய குமாரன், தெரிந்துகொள்ளப்பட்டவர் என்று சொல்லும்போதும் அது ஏனோக்கின் புத்தகத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த ஒருவரைக் குறித்து கூறும்போதும், ஏனோக்கின் புத்தகத்திற்கு பெரிய வேதாகம ஆதாரம் கொடுக்கப்படுகிறது.

யூதா 14ஆம் வசனத்தில் ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையானாகிய ஏனோக்கு தீர்க்கதரிசனம் உரைத்தான்... என்று கூறப்படுகிறது. யூதா 15ஆம் வசனத்தில் ஏனோக்கின் புத்தகம் (2:1)க்கு நேரடி குறிப்பு கொடுக்கிறார். அங்கே அவர் எல்லாரையும் நியாயந்தீர்க்கிறதற்கும், அவர்களுக்குள்ளே இருக்கிற அவபக்திக்காரர் அனைவரையும் கண்டிக்கிறதற்கும்... என்று எழுதுகிறார். ஏனோக்குக்கும் யூதாவுக்கும் இடையே சுமார் 3400 ஆண்டுகள் கால இடைவெளி உள்ளது. ஆகவே,

ஏனோக்கின் தீர்க்கதரிசனங்களை யூதா குறிப்பிடுவது, அந்த எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அப்போது அவருக்குக் கிடைத்திருந்தன என்ற முடிவுக்கு வலுவாக வழிநடத்துகிறது.

சவக்கடல் சுருள்களில் பத்து ஏனோக் கையெழுத்துப் பிரதிகளின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. புகழ்பெற்ற சுருள்கள் குமரானில் கண்டெடுக்கப்பட்ட மொத்த பொருட்களில் ஒரு பகுதி மட்டுமே. மீதமுள்ளவை பெரும்பாலும் ஏனோக் இலக்கியம், ஏனோக்கின் புத்தகப் பிரதிகள், மற்றும் யூபிலீஸ் புத்தகம் போன்ற ஏனோக் மரபில் உள்ள மற்ற அபோக்கிரிப நூல்களாகும். இவ்வளவு பிரதிகள் இருந்ததால், எசேனியர்கள் ஏனோக் எழுத்துக்களை சமூக ஜெப புத்தகமாகவோ ஆசிரியர் கையேடாகவோ படிப்பு நூலாகவோ பயன்படுத்தியிருக்கலாம்.

வேதாகம நூல்களில் சேர்க்கப்படாத (அதாவது அபோக்கிரிபா அல்லது மறைக்கப்பட்ட) நூல்களின் ஆசிரியர்களும் ஏனோக்கின் புத்தகத்தைப் பயன்படுத்தினர். அபோக்கிரிபா நூலான பர்னபாஸின் நிருபத்தின் ஆசிரியர் ஏனோக்கின் புத்தகத்தை மூன்று முறை மேற்கோள் காட்டுகிறார். இரண்டு முறை அதை **வேத வாக்கியம்** என்று அழைக்கிறார். இந்த சொல் குறிப்பாக தேவனால் ஏவப்பட்ட வார்த்தையைக் குறிக்கிறது (பர்னபாஸ் நிருபம் 4:3, 16:5,6). பன்னிரண்டு குலத்தலைவர்களின் ஆகமங்கள், யூபிலீஸ் புத்தகம் போன்ற மற்ற அபோக்கிரிபா நூல்களும் காவலாளர்களைப் பற்றிய ஏனோக்கின் கதையை அறிந்திருந்தன.

ஆதிகால சபைத் தந்தையர்கள் பலரும் ஏனோக் எழுத்துக்களை ஆதரித்தனர். ஜஸ்டின் மார்ட்டிர் எல்லா தீமையையும் பிசாசுகளுக்கு ஏற்றிக் கூறினார். பெண்களின் மேலுள்ள இச்சையால் விழுந்துபோன தூதர்களின் சந்ததியினர் என அவர் கூறிய பிசாசுகள் - நேரடியாக ஏனோக் எழுத்துக்களைக் குறிப்பிடுகின்றன. கி.பி. 170இல் எழுதப்பட்ட லெகாட்டியோ என்ற தனது நூலில் அதேனகோரஸ் ஏனோக்கை உண்மையான தீர்க்கதரிசி என்று கருதுகிறார். தங்கள் சுபாவத்தையும் பணியையும் மீறிய தூதர்களைப் பற்றி அவர் விவரிக்கிறார். அவரது எழுத்துக்களில், விழுந்துபோன தூதர்களின் இயல்பையும் அவர்கள் விழுந்ததற்கான காரணத்தையும் பற்றி விரிவாக விளக்குகிறார். இவை நேரடியாக ஏனோக் எழுத்துக்களிலிருந்து வருகின்றன.

மற்ற பல சபைத் தந்தையர்கள்: தத்தியான் (கி.பி. 110-172); லியோன்ஸ் நகர ஆயர் ஐரேனியஸ் (கி.பி. 115-185); அலெக்சாந்திரியாவின் கிளெமென்ட் (கி.பி. 150-220); தெர்துல்லியன் (கி.பி. 160-230); ஒரிஜன் (கி.பி. 186-255); லக்டான்ஷியஸ் (கி.பி. 260-330); இவர்களோடு: பிலிப்பியின் மெத்தோடியஸ், மினுசியஸ் பெலிக்ஸ், கொமோடியானஸ், மற்றும் மிலானின் அம்ப்ரோஸ் ஆகியோரும் ஏனோக் எழுத்துக்களை அங்கீகரித்து ஆதரித்தனர்.

இருபதாம் நூற்றாண்டில் சவக்கடல் சுருள்களில் பல அராமிக் ஏனோக் உரைகள் கண்டுபிடிக்கப்பட்டது கத்தோலிக்க அறிஞர் ஜே.டி.மிலிக்கை ஏனோக் எழுத்துக்களின் முழு வரலாற்றையும் தொகுக்கத் தூண்டியது. இதில் அராமிக் கையெழுத்துப் பிரதிகளின் மொழிபெயர்ப்புகளும் அடங்கும். 1976இல் ஆக்ஸ்போர்டால் வெளியிடப்பட்ட மிலிக்கின் 400 பக்க புத்தகம் ஏனோக் ஆய்வில் ஒரு மைல்கல் ஆகும். மிலிக் நிச்சயமாக இந்த துறையின் சிறந்த வல்லுநர்களில் ஒருவர் ஆவார். ஆழமான ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவான அவரது கருத்துக்கள் மிகவும் மதிக்கப்படுகின்றன.

ஏனோக்கின் புத்தகத்திற்கு எதிரான வாதங்கள் ஒவ்வொன்றாக மறைந்து போகின்றன. இப்புத்தகத்தின் வரலாற்று உண்மைத்தன்மை இல்லாமை மற்றும் பிந்திய காலம் பற்றிய இறுதி குற்றச்சாட்டுகளும் இப்புத்தகத்தின் உண்மையான பழமையின் புதிய ஆதாரங்களால் விரைவில் அமைதியாக்கப்படலாம். அத்தகைய ஆதாரம் ஒருவேளை ஏனோக்கின் திரும்ப வருகையாக இருக்கலாம். அவர் இறந்ததற்கான பதிவு எதுவும் இல்லை, மாறாக பரலோக ராஜ்யத்தில் இன்னும் உயிரோடு இருக்கிறார். மனிதன் ஒருமுறை மரிக்க நியமிக்கப்பட்டிருப்பதால், அந்த வேத வாக்கியம் நிறைவேற ஏனோக் ஒருமுறை மரிக்க வேண்டும்.

அறிஞர்கள் வெளிப்படுத்தல் 11இல் காணப்படும் ஏனோக்கின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலை ஏனோக்கின் திரும்ப வருகையோடு தொடர்புபடுத்துகிறார்கள். அங்கே நாம் அவரை மூன்றரை வருடங்கள் உலகத்தை கண்டிக்க திரும்பி வருவதைக் காண்கிறோம். இரட்டு உடை அணிந்து, ஒருவேளை எலியாவோடு கூட - அந்த நாட்களில் அவர் சொல்வதைக் கேட்ட பிறகு அவரது வாழ்க்கை மற்றும் காலங்களைப் பற்றி இறுதியாக நாம் கணக்கிட்டுச் சொல்ல முடியும் - அவர் இறுதியாக

இறந்து, மூன்று நாட்கள் உயிரற்று கிடந்து, பின்னர் மீண்டும் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை இந்த விமர்சனங்கள் புதிர் தான் .

**பரமனின் பாதையில்....**

## மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு

ஏஏனோக்கின் ஐந்து புத்தகங்களில் முதலாவதாக வெளியிடப்படும் **'பரலோக புத்திரர்களின் புத்தகம்'** என்னும் இந்நூல், வேதாகமத்தின் மறைக்கப்பட்ட புத்தகத்தில் ஒன்றாகும். தேவதூதர்களால் ஏனோக்குக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனங்களையும், பரலோக காட்சிகளையும் இந்த புத்தகம் விவரிக்கின்றன.

முதல் புத்தகமாகிய இது பின்வரும் முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது:

1. ஏனோக்கின் ஆசீர்வாத வார்த்தைகள்
2. பரலோக புத்திரராகிய காவலாளர்களின் வரலாறு
3. நீதிமான்களுக்கும் தேவபக்தியற்றவர்களுக்கும் உரிய நியாயத்தீர்ப்பு
4. பரிசுத்த தூதர்களின் தரிசனங்கள்

வரவிருக்கும் நான்கு புத்தகங்களுடன் சேர்ந்து, இந்நூல் ஏனோக்குக்கு வெளிப்படுத்தப்பட்ட முழுமையான தரிசனங்களை வழங்கும்.

மொழிபெயர்ப்பின்போது, வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளின் ஆவிக்குரிய பொருளையும், பரலோக தரிசனங்களின் மகத்துவத்தையும் காக்கும் வண்ணம் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பரிசுத்த தூதர்கள், காவலாளர்கள், நீதிமான்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் போன்ற சொற்கள் மூலநூலில் காணப்படும் அதே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நீதியின் எழுத்தாளனாகிய ஏனோக் கண்ட தரிசனங்கள், வரப்போகிற தூர தலைமுறைக்காக எழுதப்பட்டவை. அவ்வாறே, இம்மொழிபெயர்ப்பும் வருங்கால சந்ததியினருக்காக பதிவு செய்யப்படுகிறது.

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| அத்தியாயம் ஒன்று | 21 |
| அத்தியாயம் இரண்டு | 25 |
| அத்தியாயம் மூன்று | 31 |
| அத்தியாயம் நான்கு | 37 |
| அத்தியாயம் ஐந்து | 45 |
| அத்தியாயம் ஆறு | 53 |
| அத்தியாயம் ஏழு | 59 |

# அத்தியாயம் ஒன்று

## *ஏனோக்கின் ஆசீர்வாத வார்த்தைகள்*

1. உபத்திரவ காலத்திலே உயிரோடிருக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் நீதிமான்களையும் ஆசீர்வதித்த ஏனோக்கின் ஆசீர்வாத வார்த்தைகள். அப்போது துன்மார்க்கரும் தேவபக்தியற்றவர்களும் அகற்றப்படுவார்கள்.

2. தேவனால் கண்கள் திறக்கப்பட்ட நீதிமானாகிய ஏனோக் தன் உவமையைச் சொன்னான்: ‘பரலோகத்தில் பரிசுத்தரின் தரிசனத்தை நான் கண்டேன், தேவதூதர்கள் எனக்குக் காண்பித்தார்கள், அவர்களிடமிருந்து எல்லாவற்றையும் கேட்டேன், நான் கண்டவற்றை அவர்களால் உணர்ந்தேன். இவை இந்தத் தலைமுறைக்கல்ல, வரப்போகிற தூர தலைமுறைக்காக உள்ளது.’

3. தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் குறித்து நான் சொன்னேன், அவர்களைக் குறித்து என் உவமையை எடுத்துரைத்தேன்: ‘பரிசுத்தமான மகத்துவமுள்ளவர் தமது வாசஸ்தலத்திலிருந்து புறப்பட்டு வருவார்,

4. நித்திய தேவன் பூமியின்மேல் நடந்து, சீனாய் மலையின்மேல் நின்று, வானாதி வானங்களிலிருந்து தமது வல்லமையின் பலத்தோடு வெளிப்படுவார்.

5. எல்லாரும் பயத்தால் அதிர்ச்சியடைவார்கள், பரலோக புத்திரர்கள் நடுங்குவார்கள், பூமியின் கடைசிவரை மிகுந்த பயமும் நடுக்கமும் அவர்களைப் பிடிக்கும்.

6. உயர்ந்த மலைகள் அதிரும், உயர்ந்த மேடுகள் தாழ்த்தப்பட்டு, அக்கினி ஜீவாலைக்கு முன்பாக மெழுகுபோல உருகிப்போகும்.

7. பூமி முற்றிலும் பிளந்துபோகும், பூமியின்மேலுள்ள யாவும் அழியும், எல்லாவற்றிற்கும் நியாயத்தீர்ப்பு உண்டாகும்.

௮. ஆனால் நீதிமான்களோடு அவர் சமாதானம் செய்வார். தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் காப்பாற்றுவார், அவர்கள்மேல் இரக்கம் உண்டாகும். அவர்கள் எல்லாரும் தேவனுக்குரியவர்களாவார்கள், அவர்கள் செழிப்படைவார்கள், அவர்கள் எல்லாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர் அவர்கள் அனைவருக்கும் உதவி செய்வார், அவர்களுக்கு வெளிச்சம் தோன்றும், அவர்களோடு சமாதானம் செய்வார்.

௯. இதோ! அவர் தமது பத்தாயிரம் பரிசுத்தவான்களோடு நியாயத்தீர்ப்புச் செய்ய வருகிறார். துன்மார்க்கர் அனைவரையும் அழிக்கவும், மாம்சமான யாவரையும் கண்டிக்கவும், துன்மார்க்கமாய்ச் செய்த எல்லா துன்மார்க்க செயல்களுக்காகவும், துன்மார்க்கரான பாவிகள் அவருக்கு விரோதமாய்ச் சொன்ன கடினமான வார்த்தைகள் எல்லாவற்றிற்காகவும் வருகிறார்.’

# அத்தியாயம் இரண்டு

## *சிருஷ்டிப்பு*

1. வானத்தில் நடைபெறும் எல்லாவற்றையும் கவனியுங்கள், அவைகள் தங்கள் பாதைகளை மாற்றிக்கொள்வதில்லை, வானத்திலுள்ள ஜோதிகள் எல்லாம் ஒழுங்காக தங்கள் காலத்தில் உதித்து அஸ்தமிக்கின்றன, அவைகள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஒழுங்கை மீறுவதில்லை.

2. பூமியை நோக்கிப்பாருங்கள், முதல் முதல் அதின்மேல் நடக்கும் காரியங்களை கவனியுங்கள், அவைகள் எவ்வளவு உறுதியாய் இருக்கின்றன, பூமியின்மேலுள்ள எந்தக் காரியமும் மாறுவதில்லை, தேவனுடைய கிரியைகள் எல்லாம் உங்களுக்கு வெளிப்படையாயிருக்கின்றன. கோடைகாலத்தையும் மழைகாலத்தையும் பாருங்கள், எப்படி பூமி முழுவதும் தண்ணீரினாலும், மேகங்களினாலும், பனியினாலும், மழையினாலும் நிறைந்திருக்கிறது.

3. குளிர்காலத்தில் மரங்கள் எல்லாம் எப்படி பட்டுப்போய், இலைகளை உதிர்த்துவிடுகின்றன என்று கவனித்துப் பாருங்கள், பதினான்கு மரங்களைத் தவிர, அவைகள் தங்கள் இலைகளை இழப்பதில்லை, புதிய இலைகள் வரும்வரை பழைய இலைகளை இரண்டு மூன்று வருடங்கள் வைத்திருக்கின்றன.

4. மேலும், கோடைநாட்களில் சூரியன் பூமிக்கு மேலாக எப்படி இருக்கிறது என்று கவனியுங்கள். சூரியனின் வெப்பத்தினால் நீங்கள் நிழலையும் தங்குமிடத்தையும் தேடுகிறீர்கள், பூமியும் அதிகரிக்கும் வெப்பத்தால் எரிகிறது, வெப்பத்தின் காரணமாக நீங்கள் பூமியின்மேலும், கற்பாறையின்மேலும் நடக்கமுடியாது.

5. மரங்கள் எப்படி பச்சை இலைகளால் தங்களை மூடிக்கொண்டு கனிகளைத் தருகின்றன என்று கவனியுங்கள்: ஆகையால் அவருடைய கிரியைகள் எல்லாவற்றையும் குறித்து கவனமாயிருந்து, என்றென்றும் ஜீவித்திருக்கிறவர் அவைகளை எப்படி உண்டாக்கினார் என்று அறிந்துகொள்ளுங்கள்.

6. அவருடைய கிரியைகள் எல்லாம் வருடந்தோறும் என்றென்றும் இப்படியே நடக்கின்றன, அவர்கள் அவருக்காக செய்யும் வேலைகள்

எல்லாம், தேவன் கட்டளையிட்டபடியே செய்யப்படுகின்றன, அவைகள் மாறுவதில்லை.

7. கடலும் நதிகளும் எப்படி தங்கள் வேலைகளை நிறைவேற்றி, அவருடைய கட்டளைகளிலிருந்து மாறாமல் இருக்கின்றன என்று பாருங்கள்.

8. ஆனால் நீங்கள் உறுதியாய் இருக்கவில்லை, கர்த்தருடைய கட்டளைகளின்படி செய்யவில்லை, அவருடைய மகத்துவத்துக்கு விரோதமாக உங்கள் அசுத்தமான வாய்களால் பெருமையும் கடினமான வார்த்தைகளும் பேசி விலகிப்போனீர்கள். ஓ கடினமான இருதயம் உள்ளவர்களே, நீங்கள் சமாதானத்தைக் காண்பதில்லை.

9. ஆகையால் நீங்கள் உங்கள் நாட்களைச் சபிப்பீர்கள், உங்கள் ஜீவகாலம் அழிந்துபோகும், நித்திய அருவருப்பில் உங்கள் அழிவின் ஆண்டுகள் பெருகும், நீங்கள் இரக்கம் பெறமாட்டீர்கள்.

10. அந்நாட்களில் நீங்கள் நீதிமான்கள் எல்லாருக்கும் நித்திய அருவருப்பாக உங்கள் பெயர்களை ஆக்குவீர்கள், சபிக்கிற யாவரும் உங்களைக்கொண்டு சபிப்பார்கள். பாவிகளும் தேவபக்தியற்றவர்களும் உங்களை நோக்கி சாபமிடுவார்கள். தேவபக்தியற்ற உங்களுக்கு சாபம் உண்டாயிருக்கும்.

11. நீதிமான்கள் எல்லாரும் மகிழ்வார்கள், பாவமன்னிப்பும், எல்லா இரக்கமும், சமாதானமும், பொறுமையும் உண்டாயிருக்கும்.

12. அவர்களுக்கு இரட்சிப்பு உண்டாகும், நல்ல வெளிச்சம் உண்டாகும்.

13. பாவிகளாகிய உங்கள் எல்லாருக்கும் இரட்சிப்பு இல்லை, மிருகத்தின் சாபம் பாவிகளாகிய உங்கள் எல்லார்மேலும் தங்கியிருக்கும்.

14. தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கோ வெளிச்சமும் சந்தோஷமும் சமாதானமும் உண்டாயிருக்கும், அவர்கள் பூமியைச்

சுதந்தரித்துக்கொள்வார்கள்.

15. அப்பொழுது தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு ஞானம் அருளப்படும், அவர்கள் எல்லாரும் ஜீவித்து, தேவபக்தியின்மையினாலாவது பெருமையினாலாவது இனி ஒருபோதும் பாவஞ்செய்யமாட்டார்கள்: ஆனால் ஞானமுள்ளவர்கள் தாழ்மையாயிருப்பார்கள்.

16. அவர்கள் மீண்டும் கட்டளைகளை மீறுவதுமில்லை, தங்கள் ஜீவநாட்களிலெல்லாம் பாவஞ்செய்வதுமில்லை, கோபத்தினாலாவது உக்கிரத்தினாலாவது சாவதுமில்லை, தங்கள் ஜீவநாட்களின் எண்ணிக்கையை நிறைவேற்றுவார்கள்.

17. அவர்களுடைய ஜீவன் சமாதானத்தில் பெருகும், தங்கள் ஜீவநாட்களிலெல்லாம் நித்திய மகிழ்ச்சியிலும் சமாதானத்திலும் அவர்களுடைய சந்தோஷ ஆண்டுகள் பெருகும்.

# அத்தியாயம் மூன்று

## *வீழ்ந்த தூதர்கள்*

1. மனுபுத்திரர் பெருகின காலத்திலே, அழகும் வசீகரமும் உள்ள பெண்கள் அவர்களுக்குப் பிறந்தார்கள்.

2. பரலோகத்தின் புத்திரராகிய தூதர்கள் அவர்களைக் கண்டு இச்சித்து, ஒருவரோடொருவர்: 'வாருங்கள், மனுபுத்திரரின் மகள்களிலிருந்து நமக்கு மனைவிகளைத் தெரிந்துகொண்டு, பிள்ளைகளைப் பெறுவோம்' என்றார்கள்.

3. அவர்களின் தலைவனாகிய செம்யாசா அவர்களை நோக்கி: 'நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்ய உடன்படமாட்டீர்கள் என்று நான் பயப்படுகிறேன், நான் மட்டும் பெரிய பாவத்திற்கு தண்டனை பெறவேண்டியதாயிருக்கும்' என்றான்.

4. அவர்கள் எல்லாரும் அவனுக்கு மறுமொழியாக: 'நாம் எல்லாரும் ஆணையிட்டு, இந்தத் திட்டத்தை விட்டுவிடாமல் இதைச் செய்ய ஒருவருக்கொருவர் சபதம் செய்வோம்' என்றார்கள்.

5. அப்பொழுது அவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சத்தியம்பண்ணி, ஒருவருக்கொருவர் சாபங்களால் கட்டுப்பட்டார்கள். அவர்கள் இருநூறு பேர்; யாரேதின் நாட்களில் எர்மோன் மலையின் உச்சியில் இறங்கினார்கள். அவர்கள் அங்கே சத்தியம்பண்ணி ஒருவருக்கொருவர் சாபங்களால் கட்டுப்பட்டபடியால், அதை எர்மோன் மலை என்று அழைத்தார்கள்.

6. அவர்களுடைய தலைவர்களின் பெயர்கள்: அவர்களின் தலைவன் சம்லாசாஸ், அராக்லபா, ராமேல், கோகபேல், தம்லேல், ராம்லேல், தானேல், எசேக்கேல், பரகிஜால், ஆசாயேல், அர்மரோஸ், பதாரேல், ஆனானேல், சக்லேல், சம்சபேல், சதாரேல், தூரேல், யோம்யாயேல், சாரியேல். இவர்கள் பத்துப்பேருக்கு தலைவர்கள்.

7. மற்ற எல்லாரும் அவர்களோடுகூட தங்களுக்கு மனைவிகளை எடுத்துக்கொண்டார்கள். அவரவர் ஒவ்வொருத்தியைத் தெரிந்துகொண்டு, அவர்களிடத்தில் பிரவேசித்து, அவர்களோடு தீட்டுப்பட்டார்கள்.

8. அவர்கள் மந்திரங்களையும், சூனியங்களையும், வேர்களை வெட்டுதலையும் அவர்களுக்குக் கற்பித்து, மூலிகைகளை அறியப்பண்ணினார்கள்.

9. அவர்கள் கர்ப்பவதியாகி, மூவாயிரம் முழ உயரமுள்ள இராட்சதர்களைப் பெற்றார்கள். அவர்கள் மனிதருடைய உழைப்பை எல்லாம் பட்சித்தார்கள். மனிதர் அவர்களைத் தாங்கமுடியாதபோது, அந்த இராட்சதர்கள் அவர்களுக்கு விரோதமாகத் திரும்பி, மனிதர்களை விழுங்கினார்கள்.

10. அவர்கள் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும், ஊர்வனவற்றிற்கும், மீன்களுக்கும் விரோதமாகப் பாவஞ்செய்யத் தொடங்கி, ஒருவர் மாம்சத்தை ஒருவர் பட்சித்து, இரத்தத்தைக் குடித்தார்கள். அப்பொழுது பூமி அக்கிரமக்காரருக்கு விரோதமாகக் குற்றஞ்சாட்டியது.

11. ஆசாசேல் மனிதருக்குப் பட்டயங்களையும், கத்திகளையும், கேடகங்களையும், மார்க்கவசங்களையும் செய்ய கற்பித்து, பூமியின் உலோகங்களையும், அவைகளை வேலைசெய்யும் முறைமைகளையும், காப்புகளையும், ஆபரணங்களையும், கண்மையையும், கண்இமைகளை அலங்கரிப்பதையும், விலையுயர்ந்த கற்களையும், சாயங்கள் அனைத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினான்.

12. மிகுந்த தெய்வபக்தியின்மை எழும்பியது, அவர்கள் வேசித்தனம்பண்ணி, வழிதப்பி நடத்தப்பட்டு, தங்கள் வழிகளிலெல்லாம் கெட்டுப்போனார்கள்.

13. செம்யாசா மந்திரங்களையும் வேர்வெட்டுதலையும், அர்மரோஸ் மந்திரங்களை நீக்குதலையும், பரகிஜால் சோதிடத்தையும், கோகபேல் நட்சத்திரக்கூட்டங்களையும், எசேக்கேல் மேகங்களின் அறிவையும், அராகியேல் பூமியின் அடையாளங்களையும், சம்சியேல் சூரியனின் அடையாளங்களையும், சாரியேல் சந்திரனின் இயக்கத்தையும் கற்பித்தார்கள்.

14. மனிதர்கள் அழிந்துபோகையில் கதறினார்கள், அவர்களுடைய

கூக்குரல் வானம்வரை எழும்பியது.

# அத்தியாயம் நான்கு

## *தேவதூதர்களின் பரிந்துரை*

1. அப்பொழுது மிகாவேல், ஊரியேல், ரபாயேல் மற்றும் காபிரியேல் பரலோகத்திலிருந்து கீழே பார்த்தார்கள். பூமியில் மிகுதியான இரத்தம் சிந்தப்படுவதையும், எல்லா அக்கிரமங்களும் செய்யப்படுவதையும் கண்டார்கள்.

2. அவர்கள் ஒருவருக்கொருவர் சொன்னதாவது: 'குடியிருப்பாரற்ற பூமியானது, பூமியில் வாழ்கிறவர்களுடைய கூக்குரலின் சத்தத்தை பரலோகத்தின் வாசல்கள் வரை எழுப்புகிறது.'

3. இப்பொழுது பரலோகத்தின் பரிசுத்தவான்களே, மனிதர்களின் ஆத்துமாக்கள் உங்களிடம் முறையிடுகிறார்கள்: அவர்கள் 'எங்கள் வழக்கை உன்னதமான தேவனுக்கு முன்பாக கொண்டுவாருங்கள்.' என்கிறார்கள்.

4. மேலும் அவர்கள் யுகங்களின் கர்த்தரை நோக்கி: 'கர்த்தாதி கர்த்தரே, தேவாதி தேவனே, ராஜாதி ராஜாவே, யுகங்களின் தேவனே, உமது மகிமையின் சிங்காசனம் யுகங்களின் தலைமுறைகள் அனைத்திலும் நிலைத்திருக்கிறது. உமது நாமம் என்றென்றும் பரிசுத்தமும் மகிமையும் ஆசீர்வதிக்கப்பட்டதுமாய் இருக்கிறது! நீர் எல்லாவற்றையும் உண்டாக்கினீர், எல்லாவற்றின் மேலும் உமக்கு அதிகாரம் உண்டு. எல்லாம் உமது பார்வைக்கு வெளியரங்கமாகவும் திறந்தும் இருக்கிறது. நீர் எல்லாவற்றையும் காண்கிறீர், ஒன்றும் உம்மிடமிருந்து மறைந்திருக்க முடியாது.'

5. அசாசேல் செய்தவைகளை நீர் காண்கிறீர். அவன் பூமியில் எல்லா அநீதிகளையும் போதித்து, பரலோகத்தில் இருந்த நித்திய இரகசியங்களை வெளிப்படுத்தினான். மனிதர்கள் அவற்றை அறிய முயன்றனர். சம்லாசாசுக்கும் அவனுடைய கூட்டாளிகளை ஆளும் அதிகாரத்தை நீர் கொடுத்தீர்.

6. அவர்கள் பூமியிலுள்ள மனுபுத்திரிகளிடம் சென்று, அவர்களோடு உறவுகொண்டு, தங்களைத் தீட்டுப்படுத்தி, எல்லாவித பாவங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்கள். அதினால் பெண்கள் இராட்சதர்களைப் பெற்றெடுத்தனர், பூமி முழுவதும் இரத்தத்தினாலும்

அநீதியினாலும் நிறைந்தது.

7. இப்போது, இறந்தவர்களின் ஆத்துமாக்கள் கதறி பரலோக வாசல்கள் வரைக்கும் முறையிடுகிறார்கள். அவர்களுடைய புலம்பல்கள் மேலே எழும்பி, பூமியில் நடக்கும் அக்கிரம செயல்களினால் ஓயாமல் இருக்கிறது. 8 நீர் எல்லாவற்றையும் அவை நடப்பதற்கு முன்பே அறிவீர். இவைகளை நீர் காண்கிறீர், இவைகளை நீர் சகித்துக்கொள்கிறீர். இவர்களுக்கு நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று எங்களுக்கு சொல்லவில்லை.

9. அப்பொழுது உன்னதமான பரிசுத்தமும் மகத்துவமுமானவர் பேசி, லாமேக்கின் மகனிடம் ஊரியேலை அனுப்பி: நோவாவிடம் சென்று என் நாமத்தில் சொல்: உன்னை மறைத்துக்கொள்! வரப்போகும் முடிவை அவனுக்கு வெளிப்படுத்து. பூமி முழுவதும் அழிக்கப்படும், ஒரு பெரும் வெள்ளம் பூமி முழுவதையும் மூடி, அதிலுள்ள அனைத்தையும் அழிக்கும். அவன் தப்பித்துக்கொள்ளவும், அவனுடைய சந்ததி உலகத்தின் எல்லா தலைமுறைகளுக்கும் பாதுகாக்கப்படவும் அவனுக்கு போதி என்றார்.

10. மீண்டும் கர்த்தர் ரபாயேலை நோக்கி: 'அசாசேலை கை கால்களைக் கட்டி, இருளில் தள்ளு. துதாயேலில் உள்ள பாலைவனத்தில் ஒரு பள்ளத்தை உண்டாக்கி, அவனை அதில் போடு. கரடுமுரடான பாறைகளை அவன்மேல் வைத்து, இருளால் அவனை மூடு. அவன் என்றென்றும் அங்கே இருக்கட்டும். அவன் ஒளியைக் காணாதபடி அவன் முகத்தை மூடு. மகா நியாயத்தீர்ப்பின் நாளில் அவன் அக்கினியில் தள்ளப்படுவான்.

11. தேவதூதர்கள் கெடுத்த பூமியை குணமாக்கு. பூமியின் குணமாகுதலை அறிவி, அவர்கள் வாதை குணமாக்கட்டும். பரலோக புத்திரர்கள் வெளிப்படுத்தி தங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்த இரகசியங்களினால் மனுபுத்திரர் அனைவரும் அழியாதபடி இருக்கட்டும். அசாசேல் கற்பித்த கிரியைகளால் பூமி முழுவதும் கெட்டுப்போயிற்று, எல்லா பாவங்களுக்கும் அவனே காரணம்.'

12. கர்த்தர் காபிரியேலை நோக்கி: 'அநியாயப் பிறப்புகளுக்கும், தள்ளப்பட்டவர்களுக்கும், வேசித்தனத்தின் பிள்ளைகளுக்கும்

விரோதமாகச் செல். மனிதர்களிலிருந்து பரலோக புத்திரர்களின் பிள்ளைகளை அழி. அவர்கள் ஒருவரையொருவர் யுத்தத்தில் அழிக்கும்படி அனுப்பு, அவர்களுக்கு நீண்ட நாட்கள் இருக்காது. அவர்கள் தங்கள் தகப்பன்மார் மூலமாக உனக்கு விண்ணப்பம் செய்தாலும், அவர்களுக்காக எந்த வேண்டுதலும் கொடுக்கப்படாது. அவர்கள் நித்திய ஜீவனை பெற நம்புகிறார்கள், ஒவ்வொருவரும் ஐநூறு வருடங்கள் வாழலாமென்று நினைக்கிறார்கள்.'

13. கர்த்தர் மிகாவேலை நோக்கி: 'போ, ஸ்திரீகளோடு கூடி தங்களை அவர்களுடையஅசுத்தத்தால்தீட்டுப்படுத்தினசம்லாசாசையும்அவனுடைய கூட்டாளிகளையும் கட்டு. அவர்களுடைய பிள்ளைகள் ஒருவரையொருவர் கொன்று, தங்கள் பிரியமானவர்களின் அழிவைக் கண்டபின், அவர்களை பூமியின் பள்ளத்தாக்குகளில் எழுபது தலைமுறைகள் வரை கட்டிப்போடு. அவர்களுடைய நியாயத்தீர்ப்பின் நாள் வரையும், அவர்களுடைய முடிவு வரையும், என்றென்றுமுள்ள நியாயத்தீர்ப்பு நிறைவேறும் வரையும் அப்படியே இருக்கட்டும். அந்நாட்களில் அவர்கள் அக்கினியின் பாதாளத்துக்கும், வேதனைக்கும், என்றென்றும் அடைக்கப்படும் சிறைச்சாலைக்கும் கொண்டுபோகப்படுவார்கள்.

14. கண்டிக்கப்பட்டு அழிக்கப்படுகிற எவனும் அன்று முதல் எல்லா தலைமுறைகளின் முடிவு வரை அவர்களோடு கட்டப்பட்டிருப்பான். பொல்லாதவர்களின் ஆவிகள் அனைத்தையும், பரலோக புத்திரர்களின் பிள்ளைகளையும் அழி, ஏனெனில் அவர்கள் மனுக்குலத்தை துன்பப்படுத்தினார்கள்.

15. பூமியின் முகத்திலிருந்து எல்லா அநீதியையும் அழி, எல்லா பொல்லாத கிரியையும் முடிவடையட்டும். நீதியும் சத்தியமுமாகிய செடி தோன்றட்டும், அது ஆசீர்வாதமாக இருக்கும். நீதியும் சத்தியமுமான கிரியைகள் என்றென்றும் சத்தியத்திலும் சந்தோஷத்திலும் நாட்டப்படும்.

16. அப்பொழுது நீதிமான்கள் எல்லாரும் தப்பி, ஆயிரக்கணக்கான பிள்ளைகளைப் பெறும் வரை உயிரோடிருப்பார்கள். அவர்களுடைய இளமை நாட்களும் முதிர்வயது நாட்களும் சமாதானத்தோடு நிறைவேறும்.

17. அப்பொழுது பூமி முழுவதும் நீதியோடு உழப்படும், அது முழுவதும் மரங்களால் நடப்பட்டு ஆசீர்வாதத்தால் நிறையும்.

18. விரும்பத்தக்க மரங்கள் எல்லாம் அதில் நடப்படும். அவர்கள் திராட்சைச்செடிகளை நடுவார்கள், நடப்பட்ட திராட்சைச்செடி திராளான திராட்சைரசத்தைக் கொடுக்கும். விதைக்கப்பட்ட ஒவ்வொரு அளவும் ஆயிரம் மடங்கு விளையும், ஒவ்வொரு ஒலிவ மர அளவும் பத்து குடம் எண்ணெயைக் கொடுக்கும்.

19. நீ பூமியை எல்லா ஒடுக்குதலிலிருந்தும், எல்லா அநீதியிலிருந்தும், எல்லா பாவத்திலிருந்தும், எல்லா அசுத்தத்திலிருந்தும் சுத்திகரி. பூமியின்மேல் செய்யப்படும் எல்லா தீட்டையும் பூமியிலிருந்து அழித்துப்போடு.

20. மனுபுத்திரர் அனைவரும் நீதிமான்களாவார்கள், எல்லா ஜாதிகளும் எனக்கு ஆராதனை செய்து துதிப்பார்கள், எல்லாரும் என்னை வணங்குவார்கள். பூமி எல்லா அசுத்தத்திலிருந்தும், எல்லா பாவத்திலிருந்தும், எல்லா தண்டனையிலிருந்தும், எல்லா வேதனையிலிருந்தும் சுத்திகரிக்கப்படும். நான் இனி ஒருபோதும் தலைமுறை தலைமுறையாக என்றென்றும் அதன்மேல் அனுப்புவதில்லை.

21. அந்நாட்களில் நான் பரலோகத்தில் உள்ள ஆசீர்வாதத்தின் களஞ்சியங்களைத் திறந்து, மனுபுத்திரரின் வேலையின்மேலும் உழைப்பின்மேலும் அவைகளை பூமியில் இறங்கச்செய்வேன். சத்தியமும் சமாதானமும் உலகத்தின் எல்லா நாட்களிலும் மனிதரின் எல்லா தலைமுறைகளிலும் ஒன்றாக இருக்கும்.

22. இவைகளுக்கு முன்பு ஏனோக்கு எடுத்துக்கொள்ளபட்டான். மனுபுத்திரர் எவரும் அவன் எங்கே மறைக்கப்பட்டான், எங்கே வாசம்பண்ணினான், அவனுக்கு என்ன நேர்ந்தது என்று அறியவில்லை. அவனுடைய செயல்கள் பரலோக புத்திரர்களோடு தொடர்புடையதாய் இருந்தது, அவனுடைய நாட்கள் பரிசுத்தவான்களோடு இருந்தது.

23. நான் ஏனோக், மகத்துவத்தின் கர்த்தரையும் யுகங்களின் ராஜாவையும் ஸ்தோத்திரித்துக்கொண்டிருந்தேன். இதோ! பரலோக புத்திரர்கள் என்னை அழைத்து: 'ஏனோக், நீதியின் எழுத்தாளனே, போய் உயர்ந்த பரலோகத்தை விட்டு, பரிசுத்த நித்திய ஸ்தலத்தை விட்டு, ஸ்திரீகளோடு தங்களைத் தீட்டுப்படுத்தி, பூமியின் புத்திரர் செய்கிறதுபோல செய்து, தங்களுக்கு மனைவிகளை எடுத்துக்கொண்ட பரலோக பரலோக புத்திரர்களுக்கு அறிவி.

24. அவர்களுக்கு சொல்: 'நீங்கள் பூமியில் பெரிய அழிவை உண்டாக்கினீர்கள், உங்களுக்கு சமாதானமும் பாவமன்னிப்பும் கிடைக்காது.'

25. அவர்கள் தங்கள் பிள்ளைகளில் மகிழ்ச்சியடைகிறபடியினால், தங்கள் பிரியமானவர்களின் கொலையைக் காண்பார்கள், தங்கள் பிள்ளைகளின் அழிவின்மேல் புலம்புவார்கள், என்றென்றும் வேண்டுதல் செய்வார்கள், ஆனால் நீங்கள் இரக்கமும் சமாதானமும் அடையமாட்டீர்கள்.'

26 ஏனோக் சென்று சொன்னான்: 'அசாசேலே, உனக்கு சமாதானம் இல்லை, உன்னைக் கட்டும்படி கடுமையான தீர்ப்பு உனக்கு விரோதமாக பிறந்தது. நீ கற்பித்த அநீதியினிமித்தமும், மனிதர்களுக்கு நீ காண்பித்த எல்லா அவபக்தியான கிரியைகள், அநீதி மற்றும் பாவங்களினிமித்தமும், உனக்கு சகிப்புத்தன்மையும் வேண்டுதலும் அனுமதிக்கப்படாது.'

27. பின்பு நான் போய் அவர்கள் எல்லாரோடும் பேசினேன். அவர்கள் எல்லாரும் பயந்தார்கள், பயமும் நடுக்கமும் அவர்களைப் பிடித்தது. அவர்கள் மன்னிப்பு பெறும்படி நான் ஒரு மனுவை எழுதவும், அவர்களுடைய மனுவை பரலோக கர்த்தரின் சந்நிதியில் வாசிக்கவும் என்னை வேண்டிக்கொண்டார்கள்.

28. அதற்குப் பிறகு அவர்களால் அவரோடு பேசவோ, தங்கள் கண்களை பரலோகத்துக்கு உயர்த்தவோ முடியவில்லை, ஏனெனில் தாங்கள் கண்டிக்கப்பட்ட பாவங்களினால் வெட்கப்பட்டார்கள்.

29. அப்பொழுது நான் அவர்களுடைய மனுவையும், அவர்களுடைய ஆவிகள் மற்றும் தனித்தனியாக அவர்களுடைய செயல்கள் குறித்தும், அவர்கள் மன்னிப்பும் நீடித்த ஆயுசும் பெறவேண்டும் என்கிற அவர்களுடைய வேண்டுதல்களையும் எழுதினேன்.

30. நான் புறப்பட்டு எர்மோனுக்கு மேற்கே தாணின் தேசமாகிய தாணின் தண்ணீர்கள் அருகே உட்கார்ந்து, நான் தூங்கிப்போகும் வரை அவர்களுடைய மனுவை வாசித்தேன்.

31. இதோ! ஒரு கனவு எனக்கு வந்தது, தரிசனங்கள் என்மேல் வந்தது. நான் தண்டனையின் தரிசனங்களைக் கண்டேன், பரலோக புத்திரருக்கு அறிவிக்கவும் அவர்களைக் கடிந்துகொள்ளவும் எனக்கு கட்டளையிடும் ஒரு சத்தம் வந்தது.

32. நான் விழித்தபோது, அவர்களிடம் வந்தேன். அவர்கள் எல்லாரும் லெபனோனுக்கும் செனேசருக்கும் நடுவே உள்ள அபெல்ஸ்ஜெயிலில் தங்கள் முகங்களை மூடிக்கொண்டு கூடியிருந்தார்கள்.

33. நான் தூக்கத்தில் கண்ட தரிசனங்கள் அனைத்தையும் அவர்களுக்கு முன்பாக விவரித்தேன். நான் நீதியின் வார்த்தைகளைப் பேசத் தொடங்கி, பரலோக பரலோக புத்திரர்களைக் கடிந்துகொண்டேன்.

# அத்தியாயம் ஐந்து

## *நீதியின் வார்த்தைகளின் புத்தகம்*

1. நீதியின் வார்த்தைகளின் புத்தகமும், என் கனவில் நான் கண்ட தரிசனத்தில் பரிசுத்த மகா தேவனுடைய கட்டளையின்படி நித்திய பரலோக புத்திரர்களுக்கு கொடுக்கப்பட்ட கடிந்துகொள்ளுதலும் இதுவே.

2. மகா தேவன் மனிதர்களுக்கு பேசவும் இருதயத்தால் உணரவும் கொடுத்திருக்கிற மாம்சமான நாவினாலும் என் வாயின் சுவாசத்தினாலும் நான் இப்போது சொல்லப்போகிறதாவது:

3. அவர் ஞானத்தின் வார்த்தையை புரிந்துகொள்ளும் வல்லமையை மனிதனுக்கு படைத்துக் கொடுத்தது போல, வானத்தின் புத்திரராகிய பரலோக புத்திரர்களைக் கடிந்துகொள்ளும் வல்லமையை எனக்கும் கொடுத்திருக்கிறார்.

4. நான் உங்கள் விண்ணப்பத்தை எழுதினேன், ஆனால் என் தரிசனத்தில் தெரிந்ததாவது: உங்கள் விண்ணப்பம் நித்திய காலங்களிலும் உங்களுக்கு அருளப்படமாட்டாது, நியாயத்தீர்ப்பு உங்கள்மேல் முடிவாக நிறைவேறியிருக்கிறது.

5. உங்கள் விண்ணப்பம் உங்களுக்கு அருளப்படமாட்டாது. இனிமேல் நித்தியமாக நீங்கள் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியாது, உலகத்தின் நாட்களெல்லாம் பூமியின் கட்டுகளில் உங்களைக் கட்டும்படி தீர்மானம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

6. உங்கள் பிரியமான குமாரர்களின் அழிவை நீங்கள் முன்னதாகவே காண்பீர்கள், அவர்களில் உங்களுக்கு மகிழ்ச்சி இருக்காது, அவர்கள் பட்டயத்தால் உங்களுக்கு முன்பாக விழுவார்கள்.

7. நீங்கள் அவர்களுக்காக எவ்வளவு வேண்டிக்கொண்டாலும், அழுதாலும், ஜெபித்தாலும், நான் எழுதிய வார்த்தைகளை சொன்னாலும் கூட, உங்களுக்கும் அவர்களுக்கும் எந்த இரக்கமும் கிடைக்காது.

8. எனக்குக் காண்பிக்கப்பட்ட தரிசனம் இதுவே: இதோ, தரிசனத்தில் மேகங்கள் என்னை அழைத்தன, மூடுபனி என்னை வரவழைத்தது,

நட்சத்திரங்களின் இயக்கமும் மின்னல்களும் என்னை விரைந்தோடச் செய்தன, தரிசனத்தில் காற்றுகள் என்னைப் பறக்கச்செய்து மேலே தூக்கி, பரலோகத்திற்குள் கொண்டுசென்றன.

9. பளிங்குகளால் கட்டப்பட்டதும் அக்கினி ஜுவாலைகளால் சூழப்பட்டதுமான ஒரு சுவருக்கு நான் சமீபமாகச் சென்றேன்; அது என்னைப் பயமுறுத்தத் தொடங்கியது.

10. நான் அக்கினி ஜுவாலைகளுக்குள் நுழைந்து, பளிங்குகளால் கட்டப்பட்ட பெரிய வீட்டிற்கு சமீபமாகச் சென்றேன். அந்த வீட்டின் சுவர்கள் பளிங்குகளால் செய்யப்பட்ட சதுரக்கற்கள் போலிருந்தன, அதன் அடித்தளமும் பளிங்காயிருந்தது.

11. அதன் மேற்கூரை நட்சத்திரங்களின் பாதையும் மின்னல்களும் போலிருந்தது, அவைகளுக்கிடையே அக்கினிமயமான கேருபீன்கள் இருந்தன, அவைகளின் வானம் தண்ணீராயிருந்தது.

12. ஜுவாலிக்கிற அக்கினி சுவர்களைச் சூழ்ந்திருந்தது, அதின் வாசல்கள் அக்கினியால் பிரகாசித்தன.

13. நான் அந்த வீட்டிற்குள் பிரவேசித்தேன், அது அக்கினியைப்போல சூடாகவும் பனிக்கட்டியைப்போல குளிராகவும் இருந்தது. அங்கே ஜீவன் உள்ளவை ஒன்றும் இல்லை; பயம் என்னை மூடிற்று, நடுக்கம் என்னைப் பிடித்தது.

14. நான் நடுங்கி அதிர்ந்து முகங்குப்புற விழுந்தேன், ஒரு தரிசனத்தைக் கண்டேன், இதோ! முந்தினதைவிட பெரிதான இரண்டாம் வீடு இருந்தது, அதன் முழு வாசலும் எனக்கு முன்பாகத் திறந்திருந்தது, அது அக்கினி ஜுவாலையால் கட்டப்பட்டிருந்தது.

15. அதன் பிரகாசத்தையும் விசாலத்தையும் உங்களுக்கு விவரிக்க முடியாதபடிக்கு மகிமையிலும் மாட்சிமையிலும் பரப்பிலும் மிகவும் சிறந்திருந்தது.

16. அதன் தரை அக்கினிமயமாயிருந்தது, அதற்கு மேலே மின்னல்களும் நட்சத்திரங்களின் பாதையும் இருந்தன, அதன் மேற்கூரையும் எரிகிற அக்கினியாயிருந்தது. நான் பார்த்தபோது அங்கே உயர்ந்த சிங்காசனம் ஒன்றைக் கண்டேன், அது பளிங்குபோல் தோற்றமளித்தது, அதன் சக்கரங்கள் பிரகாசிக்கிற சூரியனைப்போல இருந்தன, அங்கே கேருபீன்களின் தரிசனமும் இருந்தது.

17. சிங்காசனத்தின் கீழிருந்து ஜுவாலிக்கிற அக்கினியின் ஆறுகள் புறப்பட்டன, அதனால் நான் அதை நோக்கிப் பார்க்க முடியவில்லை.

18. மகா மகிமையுள்ளவர் அதின்மேல் வீற்றிருந்தார், அவருடைய வஸ்திரம் சூரியனைவிட பிரகாசமாய் மின்னி, எந்த உறைந்த பனியைவிடவும் வெண்மையாயிருந்தது.

19. மகிமையின் மாட்சிமையினால் எந்த தேவதூதனும் உள்ளே பிரவேசித்து அவருடைய முகத்தைப் பார்க்க முடியவில்லை, எந்த மாம்சமும் அவரைக் காணமுடியவில்லை.

20. ஜுவாலிக்கிற அக்கினி அவரைச் சுற்றியிருந்தது, பெரிய அக்கினி அவருக்கு முன்பாக நின்றது, அவரை நெருங்க யாராலும் முடியவில்லை; பத்தாயிரம் பத்தாயிரமானவர்கள் அவருக்கு முன்பாக இருந்தார்கள், ஆனாலும் அவருக்கு ஆலோசனைக்காரர் தேவையில்லை.

21. அவருக்கு அருகில் இருந்த மகா பரிசுத்தவான்கள் இரவிலும் அவரை விட்டு விலகவில்லை, அவரைவிட்டுப் பிரியவுமில்லை. அதுவரை நான் நடுங்கிக்கொண்டு முகங்குப்புற விழுந்திருந்தேன், கர்த்தர் தமது வாயினால் என்னை அழைத்து: ஏனோக்கே, இங்கே வந்து என் வார்த்தையைக் கேள் என்றார்.

22. பரிசுத்தவான்களில் ஒருவர் என்னிடம் வந்து என்னை எழுப்பி, வாசலுக்கு அருகே வரச்செய்தார், நான் என் முகத்தைத் தாழ்த்தினேன்.

23. அவர் எனக்கு பதிலளித்தார், அவருடைய சத்தத்தை நான் கேட்டேன்:

ஏனோக்கே, நீதியுள்ள மனிதனே, நீதியின் எழுத்தாளனே, பயப்படாதே. இங்கே வந்து என் சத்தத்தைக் கேள்.

24. நீ போய், உனக்காக பரிந்து பேச உன்னை அனுப்பின பரலோகத்தின் புத்திரர்களிடம் சொல்: நீங்கள் மனிதர்களுக்காக பரிந்து பேச வேண்டியவர்கள், மனிதர்கள் உங்களுக்காக அல்ல. நீங்கள் ஏன் உயர்ந்த, பரிசுத்த, நித்திய வானத்தை விட்டு, பெண்களோடு சயனித்து, மனுபுத்திரிகளோடு உங்களைத் தீட்டுப்படுத்தி, உங்களுக்கு மனைவிகளை எடுத்து, பூமியின் பிள்ளைகளைப்போல செய்து, இராட்சதர்களை உங்கள் குமாரர்களாகப் பெற்றீர்கள்?

25. நீங்கள் பரிசுத்தராயும், ஆவிக்குரியவர்களாயும், நித்திய ஜீவனை உடையவர்களாயும் இருந்தும், பெண்களின் இரத்தத்தோடு உங்களைத் தீட்டுப்படுத்தி, மாம்ச இரத்தத்தோடு பிள்ளைகளைப் பெற்று, மரித்துப்போகிற மனிதர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் இச்சித்தீர்கள்.

26. மனிதர்களுக்கு பூமியில் ஒன்றும் குறைவுபடாதபடி, அவர்கள் கர்ப்பந்தரித்து பிள்ளைகளைப் பெறும்படி நான் அவர்களுக்கு மனைவிகளையும் கொடுத்தேன்.

27. நீங்கள் முன்பு ஆவிக்குரியவர்களாய், உலகத்தின் சகல தலைமுறைகளுக்கும் நித்திய ஜீவனையும் அழியாமையையும் உடையவர்களாய் இருந்தீர்கள். ஆகையால் நான் உங்களுக்கு மனைவிகளை நியமிக்கவில்லை; வானத்தின் ஆவிக்குரியவர்களுக்கு வானத்திலேயே வாசஸ்தலம் உண்டு.

28. இப்போதும், ஆவியிலும் மாம்சத்திலும் பிறந்த இராட்சதர்கள் பூமியின்மேல் பொல்லாத ஆவிகள் என்று அழைக்கப்படுவார்கள், பூமியில் அவர்களுடைய வாசஸ்தலம் இருக்கும்.

29. பொல்லாத ஆவிகள் அவர்களுடைய சரீரங்களிலிருந்து புறப்பட்டன; ஏனெனில் அவை மனிதர்களிலிருந்தும் பரலோக புத்திரர்களிருந்தும் பிறந்தவை, இதுவே அவைகளின் ஆரம்பமும் மூல

தோற்றமுமாயிருக்கிறது; அவை பூமியில் பொல்லாத ஆவிகளாயிருக்கும், பொல்லாத ஆவிகள் என்று அழைக்கப்படும்.

30. இராட்சதர்களின் ஆவிகள் துன்புறுத்தி, ஒடுக்கி, அழித்து, தாக்கி, போர்செய்து, பூமியில் அழிவை உண்டாக்கி, துன்பத்தை விளைவிக்கின்றன. அவை உணவு உட்கொள்ளாமலிருந்தும், பசித்து தாகமடைந்து, தீங்குகளை உண்டாக்குகின்றன.

31. இந்த ஆவிகள் மனுபுத்திரருக்கும் பெண்களுக்கும் விரோதமாக எழும்பும், ஏனெனில் அவை அவர்களிலிருந்து தோன்றின.

32. இராட்சதர்கள் கொல்லப்பட்டு அழிந்த நாள் முதற்கொண்டு, அவர்களுடைய உடலிலிருந்து பிரிந்த ஆவிகள் தொடர்ந்து அழிவை உண்டாக்கும். இந்த ஆவிகள் கடைசி நியாயத்தீர்ப்பின் நாள் வரும்வரை தண்டிக்கப்படாமல் இருக்கும். பரலோக புத்திரர்களையும் தேவபக்தியற்றவர்களையும் உலகத்தின் முடிவு வரும்வரை இப்படியே அழித்துக்கொண்டே இருக்கும்.

33. இப்போது உனக்காகப் பரிந்து பேச உன்னை அனுப்பின பரலோக புத்திரர்களுக்கு, முன்னே வானத்தில் இருந்தவர்களுக்கு நீ சொல்லவேண்டியது: நீங்கள் வானத்தில் இருந்தீர்கள், ஆனால் எல்லா இரகசியங்களும் உங்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை, நீங்கள் மதிப்பற்றவைகளை அறிந்தீர்கள், உங்கள் இருதயக் கடினத்தினால் அவைகளை பெண்களுக்கு அறிவித்தீர்கள், இந்த இரகசியங்களினால் பெண்களும் ஆண்களும் பூமியில் மிகுந்த தீமையை நடப்பிக்கிறார்கள்.

34. ஆகையால் அவர்களுக்குச் சொல்: உங்களுக்கு சமாதானம் இல்லை.

# அத்தியாயம் ஆறு

## *தேவதூதர்களின் தரிசனம்*

1. தேவதூதர்கள் என்னை அழைத்துச் சென்று, ஜுவாலை போன்ற அக்கினியாக இருந்தவர்களும், அவர்கள் விரும்பியபோது மனிதர்களாகத் தோன்றக்கூடியவர்களும் இருந்த ஓர் இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்கள்.

2. அவர்கள் என்னை இருளான இடத்திற்கும், உச்சி வானத்தை எட்டும் ஒரு மலைக்கும் அழைத்துச் சென்றார்கள்.

3. நான் சுடர்களின் இடங்களையும், நட்சத்திரங்களின் பொக்கிஷங்களையும், இடியின் களஞ்சியங்களையும், ஆழங்களின் கடைசியிலும், அங்கே அக்கினி வில்லும், அம்புகளும், அம்பறாத்தூணியும், அக்கினி பட்டயமும், மின்னல்கள் அனைத்தையும் கண்டேன்.

4. அவர்கள் என்னை ஜீவ தண்ணீர்களுக்கும், சூரியன் அஸ்தமிக்கும் ஒவ்வொரு மாலையிலும் பெறும் மேற்கத்திய அக்கினிக்கும் அழைத்துச் சென்றார்கள்.

5. நான் தண்ணீரைப் போல பாயும் அக்கினி நதிக்கு வந்தேன், அது மேற்கே உள்ள பெரிய கடலில் கலக்கிறது.

6. நான் பெரிய நதிகளைக் கண்டேன், பெரிய நதிக்கும் பெரிய இருளுக்கும் வந்தேன், மாம்சம் நடவாத இடத்திற்குச் சென்றேன். குளிர்கால இருளின் மலைகளையும், ஆழத்தின் தண்ணீர்கள் அனைத்தும் பாயும் இடத்தையும் கண்டேன்.

7. பூமியின் எல்லா நதிகளின் வாய்களையும், ஆழத்தின் வாயையும் கண்டேன்.

8. எல்லா காற்றுகளின் பொக்கிஷங்களையும் கண்டேன், அவற்றால் அவர் முழு சிருஷ்டிப்பையும், பூமியின் உறுதியான அஸ்திபாரங்களையும் எப்படி அமைத்தார் என்பதைக் கண்டேன்.

9. நான் பூமியின் மூலைக்கல்லைக் கண்டேன், வானத்தின் ஆகாயத்தைத்

தாங்கும் நான்கு காற்றுகளையும் கண்டேன்.

10. வானத்தின் மண்டலங்களை விரிக்கும் காற்றுகளையும், வானத்திற்கும் பூமிக்கும் இடையே அவற்றின் நிலையத்தையும் கண்டேன்: இவைகளே வானத்தின் தூண்கள்.

11. சூரியனின் சுற்றளவையும், எல்லா நட்சத்திரங்களையும் அவற்றின் அஸ்தமனத்திற்குக் கொண்டு செல்லும் வானத்தின் காற்றுகளைக் கண்டேன்.

12. மேகங்களைச் சுமக்கும் பூமியின் காற்றுகளையும், தேவதூதர்களின் பாதைகளையும் கண்டேன்.

13. பூமியின் கடைசியில் வானத்தின் ஆகாயத்தைக் கண்டேன், இரவும் பகலும் எரியும் ஓர் இடத்திற்குச் சென்றேன், அங்கே மகத்தான கற்களால் ஆன ஏழு மலைகள் இருந்தன.

14. கிழக்கே மூன்றும், தெற்கே மூன்றுமாக இருந்தது. கிழக்கே உள்ளவை வண்ண கற்களாலும், ஒன்று முத்தாலும், ஒன்று பதுமராகத்தாலும், தெற்கே உள்ளவை சிவப்புக் கல்லாலும் ஆனவை.

15. ஆனால் நடுவிலுள்ளது தேவனுடைய சிங்காசனம் போல வானத்தை எட்டியது, வெண்கல்லால் ஆனது, சிங்காசனத்தின் உச்சி இந்திரநீலத்தால் ஆனது.

16. நான் ஜுவாலையான அக்கினியைக் கண்டேன். இந்த மலைகளுக்கு அப்பால் பெரிய பூமியின் கடைசிப் பகுதி உள்ளது: அங்கே வானங்கள் முடிவடைந்தன.

17. நான் ஆழமான பிளவைக் கண்டேன், பரலோக அக்கினியின் தூண்களுடன், அவற்றிடையே உயரத்திலும் ஆழத்திலும் அளவற்ற அக்கினித் தூண்கள் விழுவதைக் கண்டேன்.

18. அந்தப் பிளவுக்கு அப்பால், மேலே வானத்தின் ஆகாயமும் இல்லாத, கீழே உறுதியான பூமியும் இல்லாத ஓர் இடத்தைக் கண்டேன்: அங்கே தண்ணீரும் இல்லை, பறவைகளும் இல்லை, அது பயங்கரமான வெறுமையான இடமாக இருந்தது.

19. அங்கே பெரிய எரிமலைகள் போன்ற ஏழு நட்சத்திரங்களைக் கண்டேன், அவற்றைக் குறித்து நான் விசாரித்தபோது, தேவதூதன் சொன்னான்: இது வானத்திற்கும் பூமிக்கும் முடிவான இடம். இது நட்சத்திரங்களுக்கும் பரலோக சேனைக்கும் சிறைச்சாலையாக மாறியுள்ளது.

20. அக்கினியின் மேல் உருளும் நட்சத்திரங்கள், தங்கள் குறித்த காலங்களில் தோன்றாததால் ஆரம்பத்தில் கர்த்தருடைய கட்டளையை மீறினவை.

21. அவர் அவற்றின் மேல் கோபமடைந்து, அவற்றின் குற்றம் பத்தாயிரம் வருடங்களில் நிறைவேறும் வரை அவற்றைக் கட்டி வைத்தார்.

22. ஊரியேல் என்னிடம் சொன்னான்: பெண்களோடு தங்களை இணைத்துக் கொண்ட தேவதூதர்கள் இங்கே நிற்பார்கள், அவர்களுடைய ஆவிகள் பல வடிவங்களை எடுத்து மனுக்குலத்தை அசுத்தப்படுத்தி, பிசாசுகளை தெய்வங்களாக வணங்கும்படி அவர்களை வழி தப்ப வழிநடத்தும்.

23. அவர்கள் முடிவாக்கப்படும் வரை நியாயந்தீர்க்கப்படும் பெரிய நியாயத்தீர்ப்பின் நாள் வரை இங்கே நிற்பார்கள். வழி தப்பிப்போன தேவதூதர்களின் பெண்களும் பேய் ஆவிகளாக மாறுவார்கள்.

24. நான், ஏனோக்கு, மட்டுமே எல்லாவற்றின் முடிவுகளின் தரிசனத்தைக் கண்டேன்: நான் கண்டது போல எந்த மனிதனும் காணமாட்டான்.

# அத்தியாயம் ஏழு

## *பரிசுத்த தூதர்கள்*

1. மனுக்குலத்தைக் காக்கும் பரிசுத்த தூதர்களின் பெயர்கள் இவைகளே.

2. உலகத்தையும் பாதாளத்தையும் ஆளுகிற பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ஊரியேல்.

3. மனிதர்களின் ஆவிகளை ஆளுகிற பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ராபேல்.

4. வானத்தில் உள்ள ஒளிப்பொருள்களை மேற்பார்வையிடும் பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ராகுவேல்.

5. மனுக்குலத்தின் சிறந்த பாகத்தையும் குழப்பத்தையும் ஆளுகிற பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய மிகாயேல்.

6. ஆவியிலே பாவம்செய்கிற ஆவிகளை ஆளுகிற பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய சராக்காயேல்.

7. பரதீசையையும், சர்ப்பங்களையும், கேருபீன்களையும் ஆளுகிற பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய காபிரியேல்.

8. உயிர்த்தெழுகிறவர்களை ஆளும்படி தேவனால் நியமிக்கப்பட்ட பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ரெமியேல்.

9. குழப்பமான இடத்திற்கு நான் சென்றேன். அங்கே பயங்கரமான ஒன்றைக் கண்டேன்: மேலே வானமும் இல்லை, கீழே உறுதியான பூமியும் இல்லை, ஆனால் குழப்பமும் பயங்கரமுமான ஒரு இடம் இருந்தது.

10. அங்கே வானத்தின் ஏழு நட்சத்திரங்கள் பெரிய மலைகளைப் போல் ஒன்றாகக் கட்டப்பட்டு, அக்கினியால் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டேன்.

11. அப்பொழுது நான்: எந்தப் பாவத்திற்காக இவை கட்டப்பட்டிருக்கின்றன, எதற்காக இங்கே தள்ளப்பட்டிருக்கின்றன? என்று கேட்டேன்.

12. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த தூதர்களில் தலைவனாகிய ஊரியேல் சொன்னான்: ஏனோக்கே, நீ ஏன் கேட்கிறாய், சத்தியத்தை அறிய ஏன் ஆவலாயிருக்கிறாய்? இவை வானத்து நட்சத்திரங்களில் கர்த்தருடைய கட்டளையை மீறினவைகள்; இவைகளுடைய பாவங்களுக்குரிய காலமாகிய பத்தாயிரம் வருடங்கள் நிறைவேறும்வரை இங்கே கட்டப்பட்டிருக்கின்றன.

13. அவ்விடத்திலிருந்து மேலும் பயங்கரமான மற்றொரு இடத்திற்குப் போனேன். அங்கே பயங்கரமான ஒன்றைக் கண்டேன். பெரிய அக்கினி எரிந்து ஜுவாலித்துக்கொண்டிருந்தது. அந்த இடம் பாதாளம்வரை பிளந்திருந்தது, அக்கினித் தூண்கள் இறங்கிக்கொண்டிருந்தன. அதன் பரப்பையும் அளவையும் நான் காணவும் இல்லை, யூகிக்கவும் இல்லை.

14. அப்பொழுது நான்: இந்த இடம் எவ்வளவு பயங்கரமானது, பார்க்க எவ்வளவு கொடூரமானது! என்றேன்.

15. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ஊரியேல் எனக்குப் பதிலளித்து: ஏனோக்கே, நீ ஏன் இவ்வளவு பயந்து நடுங்குகிறாய்? என்றான்.

16. நான் : இந்தப் பயங்கரமான இடத்தினாலும், இந்த வேதனையின் காட்சியினாலும். என்று பதிலளித்தேன்.

17. அவன் எனக்குச் சொன்னான்: இந்த இடம் தூதர்களின் சிறைச்சாலை, இங்கே அவர்கள் என்றென்றைக்கும் சிறைப்பட்டிருப்பார்கள்.

18. அங்கிருந்து கடினமான கன்மலையாகிய மற்றொரு இடத்திற்குப் போனேன்.

19. அதில் நான்கு வெறுமையான இடங்கள் இருந்தன, ஆழமாகவும் அகலமாகவும் மிகவும் மிருதுவாகவும் இருந்தன. எவ்வளவு மிருதுவாக இந்த வெறுமையான இடங்கள் இருந்ததோ, அவ்வளவு ஆழமாகவும்

இருண்டும் காணப்பட்டன.

20. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ராபேல் எனக்குப் பதில் சொன்னான்: இந்தப் பள்ளமான இடங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உண்டாக்கப்பட்டன. இறந்தவர்களின் ஆவிகள் எல்லாம் இங்கே கூடவேண்டும். ஆம், மனுபுத்திரரின் ஆத்துமாக்கள் அனைத்தும் இங்கே சேரவேண்டும். கடைசி நியாயத்தீர்ப்பின் நாள் வரும்வரையும், குறிக்கப்பட்ட காலம் வரும்வரையும், பெரிய நியாயத்தீர்ப்பு நடக்கும்வரையும் அவர்களை வைத்திருக்க இந்த இடங்கள் உண்டாக்கப்பட்டன.

21. மரித்த மனிதன் ஒருவன் முறையிடுவதை நான் கண்டேன், அவன் குரல் வானம்வரை சென்று முறையிட்டது. என்னுடனிருந்த தூதனாகிய ராபேலிடம் நான் கேட்டேன்: முறையிடுகிற இந்த ஆவி யாருடையது, யாருடைய குரல் வானம்வரை சென்று முறையிடுகிறது?

22. அவன் எனக்குப் பதிலளித்து: இது ஆபேலின் ஆவி, அவனை அவன் சகோதரன் காயீன் கொன்றான். அவன் வித்து பூமியின் முகத்திலிருந்து அழிக்கப்படும்வரையும், மனுபுத்திரரின் வித்திலிருந்து அவன் வித்து அழிக்கப்படும்வரையும் அவனுக்கு எதிராக முறையிடுகிறான் என்றான்.

23. அப்பொழுது நான் அதைக்குறித்தும், எல்லா வெறுமையான இடங்களைக்குறித்தும் கேட்டேன்: ஏன் ஒன்று மற்றொன்றிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது?

24. அவன் எனக்குப் பதிலளித்து: மரித்தோரின் ஆவிகள் பிரிக்கப்படும்படி இந்த மூன்று பிரிவுகள் உண்டாக்கப்பட்டன. நீதிமான்களின் ஆவிகளுக்காக இப்படிப்பட்ட பிரிவு உண்டாக்கப்பட்டது, அதில் பிரகாசமான நீரூற்று உண்டு. பாவிகள் மரிக்கும்போதும், பூமியில் அடக்கம்பண்ணப்படும்போதும், அவர்கள் வாழ்நாளில் அவர்கள்மேல் நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப்படாதபோதும் அவர்களுக்காக இப்படிப்பட்ட பிரிவு உண்டாக்கப்பட்டது.

25. இங்கே அவர்களுடைய ஆவிகள் பெரிய வேதனையில் பிரிக்கப்பட்டிருக்கும், நியாயத்தீர்ப்பின் பெரிய நாள்வரையும், தண்டனை வரையும், என்றென்றைக்கும் சபிக்கப்பட்டவர்களின் வேதனை வரையும், அவர்களுடைய ஆவிகளுக்கான பதிலளிப்பு வரையும். அங்கே அவர் அவர்களை என்றென்றைக்கும் கட்டிவைப்பார். பாவிகளின் நாட்களில் கொல்லப்பட்டபோது தங்கள் அழிவைக்குறித்து வெளிப்படுத்தி முறையிடுகிறவர்களின் ஆவிகளுக்காக இப்படிப்பட்ட பிரிவு உண்டாக்கப்பட்டது.

26. நீதிமான்களாக இல்லாமல் பாவிகளாக இருந்த மனிதர்களின் ஆவிகளுக்காக இப்படிப்பட்ட பிரிவு உண்டாக்கப்பட்டது. அக்கிரமத்தில் நிறைந்தவர்களாகவும், அக்கிரமக்காரர்களுடன் கூட்டாளிகளாகவும் இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய ஆவிகள் நியாயத்தீர்ப்பின் நாளில் கொல்லப்படுவதில்லை, அங்கிருந்து எழுப்பப்படுவதும் இல்லை.

27. அப்பொழுது நான் மகிமையின் கர்த்தரை ஸ்தோத்திரித்து: என் ஆண்டவராகிய நீதியின் கர்த்தர் என்றென்றைக்கும் ஆளுகிறவர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக என்றேன்.

28. அங்கிருந்து பூமியின் கடைசிவரை மேற்கே போனேன். அங்கே இரவும் பகலும் ஓய்வில்லாமல் எரிந்துகொண்டிருந்த அக்கினியைக் கண்டேன், அது தன் பாதையிலிருந்து நின்றுபோவதில்லை.

29. நான் கேட்டேன்: ஓய்வில்லாமல் இருக்கிற இது என்ன?

30. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ராகுவேல் எனக்குப் பதிலளித்து: நீ கண்ட இந்த அக்கினியின் பாதை மேற்கிலிருந்து வானத்தின் ஒளிகளை துரத்துகிற அக்கினி என்றான்.

31. அங்கிருந்து பூமியின் வேறொரு இடத்திற்குப் போனேன். அங்கே இரவும் பகலும் எரிகிற அக்கினி மலைத்தொடரை அவன் எனக்குக் காண்பித்தான்.

32. நான் அதைக் கடந்து சென்றேன், ஒன்றுக்கொன்று வித்தியாசமான ஏழு மகத்தான மலைகளைக் கண்டேன். கற்கள் மகத்தானவையாகவும் அழகானவையாகவும் இருந்தன, முழுமையாக மகத்தானவையாகவும், மகிமையான தோற்றமுள்ளவையாகவும், அழகான வெளிப்புறமுள்ளவையாகவும் இருந்தன. மூன்று கிழக்கே நோக்கி ஒன்றின்மேல் ஒன்றாகவும், மூன்று தெற்கே நோக்கி ஒன்றின்மேல் ஒன்றாகவும் இருந்தன. ஆழமான கரடுமுரடான பள்ளத்தாக்குகள் இருந்தன, ஒன்றும் மற்றொன்றோடு இணையவில்லை.

33. ஏழாவது மலை இவைகளின் மத்தியில் இருந்தது, சிங்காசனத்தின் இருக்கையைப்போல உயரத்தில் அவைகளை மிஞ்சியிருந்தது. சுகந்த மரங்கள் சிங்காசனத்தைச் சுற்றியிருந்தன.

34. அவைகளில் ஒரு மரம் இருந்தது, நான் இதுவரை நுகர்ந்திராத வாசனையுள்ளதாக இருந்தது. அவைகளில் எதுவும் அதைப்போல் இல்லை, மற்றவை அதைப்போல் இல்லை. அது எல்லா வாசனைகளையும்விட மேலான வாசனையுள்ளதாக இருந்தது, அதன் இலைகளும் பூக்களும் மரமும் என்றென்றைக்கும் வாடாதவைகள். அதன் கனி அழகானது, பேரீச்ச மரத்தின் கனியைப்போல் தோற்றமளித்தது.

35. அப்பொழுது நான்: இந்த மரம் எவ்வளவு அழகானது, வாசனையுள்ளது, அதன் இலைகள் அழகானவை, அதன் பூக்கள் பார்வைக்கு மிகவும் இன்பமானவை என்றேன்.

36. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த கனம்பொருந்திய தூதர்களில் அவர்களுடைய தலைவனாகிய மிகாயேல் பதிலளித்தான்.

37. அவன் எனக்குச் சொன்னான்: ஏனோக்கே, நீ ஏன் மரத்தின் வாசனையைக்குறித்து என்னிடம் கேட்கிறாய், ஏன் சத்தியத்தை அறிய விரும்புகிறாய்?

38. அப்பொழுது நான் அவனுக்குப் பதிலளித்து: எல்லாவற்றையும்குறித்து அறிய விரும்புகிறேன், குறிப்பாக இந்த மரத்தைக்குறித்து என்றேன்.

39. அவன் பதிலளித்து: நீ கண்ட இந்த உயர்ந்த மலை, அதன் உச்சி தேவனுடைய சிங்காசனத்தைப்போல் இருக்கிறது, அது அவருடைய சிங்காசனம், அங்கே பரிசுத்த மகத்துவமுள்ளவர், மகிமையின் கர்த்தர், நித்திய ராஜா அமர்ந்திருப்பார், அவர் நன்மையோடு பூமியை சந்திக்க இறங்கிவரும்போது அமர்ந்திருப்பார். இந்த வாசனையுள்ள மரத்தைக்குறித்து சொல்லுகிறேன், மகா நியாயத்தீர்ப்புவரை எந்த மனிதனும் அதைத் தொடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டான். அப்பொழுது அவர் எல்லாவற்றின்மேலும் பழிவாங்கி, என்றென்றைக்கும் நிறைவேற்றுவார். அப்பொழுது அது நீதிமான்களுக்கும் பரிசுத்தவான்களுக்கும் கொடுக்கப்படும். அதன் கனி தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு ஆகாரமாக இருக்கும்: அது பரிசுத்த இடத்திற்கு, நித்திய ராஜாவாகிய கர்த்தருடைய ஆலயத்திற்கு மாற்றப்படும்.

40. அப்பொழுது அவர்கள் மகிழ்ச்சியோடு சந்தோஷப்பட்டு மகிழுவார்கள், பரிசுத்த இடத்திற்குள் பிரவேசிப்பார்கள். அதன் வாசனை அவர்கள் எலும்புகளில் இருக்கும், அவர்கள் பூமியில் நீண்ட ஆயுசு வாழ்வார்கள். உன் பிதாக்கள் வாழ்ந்ததுபோல; அவர்கள் நாட்களில் துக்கமோ வாதையோ வேதனையோ ஆபத்தோ அவர்களைத் தொடாது.

41. அப்பொழுது நான் மகிமையின் தேவனை, நித்திய ராஜாவை ஸ்தோத்திரித்தேன், அவர் நீதிமான்களுக்காக இப்படிப்பட்டவைகளை ஆயத்தம்பண்ணி, அவைகளை சிருஷ்டித்து, அவர்களுக்குக் கொடுக்க வாக்குப்பண்ணினார்.

42. அங்கிருந்து பூமியின் மத்திக்குப் போனேன். அங்கே ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு இடத்தைக் கண்டேன், அதில் நிலைத்திருக்கிற கிளைகளுள்ள பூத்துக்கொண்டிருக்கிற மரங்கள் இருந்தன.

43. அங்கே ஒரு பரிசுத்த மலையைக் கண்டேன், மலைக்குக் கீழே கிழக்கே ஒரு நீரோடை இருந்தது, அது தெற்கே நோக்கிப் பாய்ந்தது. கிழக்கே இந்த மலையைவிட உயரமான மற்றொரு மலையைக் கண்டேன், அவைகளுக்கிடையே ஆழமான குறுகிய பள்ளத்தாக்கு இருந்தது. அதிலும் மலைக்குக் கீழே ஒரு நீரோடை பாய்ந்தது.

44. அதற்கு மேற்கே முந்தைய மலையைவிடக் குறைவான உயரமுள்ள மற்றொரு மலை இருந்தது, சிறிய உயரமுள்ளதாக இருந்தது, அவைகளுக்கிடையே ஆழமான வறண்ட பள்ளத்தாக்கு இருந்தது. மூன்று மலைகளின் கடைசியிலும் ஆழமான வறண்ட மற்றொரு பள்ளத்தாக்கு இருந்தது.

45. எல்லா பள்ளத்தாக்குகளும் ஆழமானவையும் குறுகியவையும், கடினமான பாறைகளாலானவையும் இருந்தன, அவைகளின்மேல் மரங்கள் நடப்படவில்லை. நான் பாறைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டேன், பள்ளத்தாக்கைக் கண்டு ஆச்சரியப்பட்டேன், ஆம், மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

46. அப்பொழுது நான்: இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலம் முழுவதும் மரங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது, இந்தச் சபிக்கப்பட்ட பள்ளத்தாக்கு இவைகளுக்கு மத்தியில் எதற்காக இருக்கிறது? என்றேன்.

47. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த தூதர்களில் ஒருவனாகிய ஊரியேல் பதிலளித்து: இந்தச் சபிக்கப்பட்ட பள்ளத்தாக்கு என்றென்றைக்கும் சபிக்கப்பட்டவர்களுக்காக இருக்கிறது. கர்த்தருக்கு எதிராகத் தகாத வார்த்தைகளைத் தங்கள் வாயினால் பேசி, அவருடைய மகிமைக்கு எதிராகக் கடினமான காரியங்களைப் பேசுகிறவர்கள் எல்லோரும் இங்கே கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். இங்கே அவர்கள் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள், இங்கே அவர்களுடைய நியாயத்தீர்ப்பின் இடமாக இருக்கும்.

48. கடைசி நாட்களில் நீதிமான்களுக்கு முன்பாக என்றென்றைக்கும் நீதியான நியாயத்தீர்ப்பின் காட்சி அவர்கள்மேல் இருக்கும். இங்கே இரக்கமுள்ளவர்கள் மகிமையின் கர்த்தரை, நித்திய ராஜாவை ஆசீர்வதிப்பார்கள். முந்தினவர்கள்மேலுள்ள நியாயத்தீர்ப்பின் நாட்களில் அவர் அவர்களை இரக்கத்தின்படி நியமித்ததற்காக அவரை ஆசீர்வதிப்பார்கள்.

49. அப்பொழுது நான் மகிமையின் கர்த்தரை ஸ்தோத்திரித்து, அவருடைய மகிமையை வெளிப்படுத்தி, அவரை மகிமையாகத் துதித்தேன்.

50. அங்கிருந்து கிழக்கே, வனாந்தரத்தின் மலைத்தொடருக்கு மத்தியில் போனேன். நான் ஒரு பாழ்நிலத்தைக் கண்டேன், அது தனிமையாக இருந்தது, மரங்களும் தாவரங்களும் நிறைந்திருந்தது. மேலிருந்து தண்ணீர் பாய்ந்தது. வடமேற்கே நோக்கி ஒரு பெரிய நீரோட்டம்போல பாய்ந்து, எல்லா பக்கங்களிலும் மேகங்களும் பனியும் எழும்பச்செய்தது.

51. அங்கிருந்து வேறொரு இடத்திற்கு, வனாந்தரத்தில் போனேன், இந்த மலைத்தொடரின் கிழக்குப் பகுதிக்கு நெருங்கினேன். அங்கே சாம்பிராணி மரங்களும் வெள்ளைப்போளம் மரங்களும் வாசனை வீசுவதைக் கண்டேன், மரங்கள் வாதுமை மரத்தைப் போன்றிருந்தன.

52. இவைகளுக்கு அப்பால், கிழக்கே தூரமாகப் போனேன். வேறொரு இடத்தை, ஒரு நீர்ப்பள்ளத்தாக்கைக் கண்டேன். அதில் ஒரு மரம் இருந்தது, மஸ்திக்கி மரத்தைப்போன்ற வாசனையுள்ள மரங்களின் நிறமுள்ளதாக இருந்தது. அந்தப் பள்ளத்தாக்குகளின் பக்கங்களில் வாசனையுள்ள இலவங்கப்பட்டை மரங்களைக் கண்டேன். இவைகளுக்கு அப்பால் கிழக்கே போனேன்.

53. வேறு மலைகளைக் கண்டேன், அவைகளுக்கிடையே மரச்சோலைகள் இருந்தன, அவைகளிலிருந்து சரர என்றும் கல்பானம் என்றும் அழைக்கப்படும் அமிர்தம் பாய்ந்தது. இந்த மலைகளுக்கு அப்பால், பூமியின் கடைசிவரை கிழக்கே மற்றொரு மலையைக் கண்டேன், அதில் சோற்று கற்றாளை மரங்கள் இருந்தன, எல்லா மரங்களும் வாதுமை மரங்களைப்போல் ஸ்டாக்டேவால் நிறைந்திருந்தன. அதை எரிக்கும்போது எந்த வாசனையைவிட இனிமையான வாசனை வீசியது.

54. இந்த வாசனைகளுக்குப் பிறகு, வடக்கே மலைகளை நோக்கிப் பார்த்தேன், தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டுச்செடியும் வாசனை மரங்களும் இலவங்கப்பட்டையும் மிளகும் நிறைந்த ஏழு மலைகளைக் கண்டேன்.

55. அங்கிருந்து இந்த மலைகள் எல்லாவற்றின் உச்சிகளின்மேல், பூமியின் கிழக்கே தூரமாகப் போனேன், செங்கடலைக் கடந்து தூரமாகச் சென்றேன், சோத்தியேல் தூதனைக் கடந்து போனேன்.

56. நீதியின் தோட்டத்திற்கு வந்தேன், தூரத்திலிருந்து அநேக மரங்களைக் கண்டேன், அங்கே மிகப் பெரிய இரண்டு மரங்களைக் கண்டேன், மிகப் பெரியவையும், அழகானவையும், மகிமையானவையும், பிரமாண்டமானவையும், அறிவின் மரமும் இருந்தன. அதன் பரிசுத்த கனியை அவர்கள் சாப்பிட்டு பெரிய ஞானத்தை அறிந்துகொள்கிறார்கள்.

57. அந்த மரம் உயரத்தில் ஆலமரத்தைப்போல் இருந்தது, அதன் இலைகள் கொத்துக்கொத்தாய் திராட்சைக்கொடியின் கனிகளைப்போல் மிக அழகாக இருந்தன. மரத்தின் வாசனை தூரம்வரை பரவியது.

58. அப்பொழுது நான்: இந்த மரம் எவ்வளவு அழகானது, அதன் தோற்றம் எவ்வளவு கவர்ச்சிகரமானது! என்றேன்.

59. அப்பொழுது என்னுடனிருந்த பரிசுத்த தூதனாகிய ராபேல் எனக்குப் பதிலளித்து: இது ஞானத்தின் மரம், உனக்கு முன்னிருந்த உன் முதிர்ந்த தகப்பனும் முதிர்ந்த தாயும் இதிலிருந்து சாப்பிட்டார்கள், அவர்கள் ஞானத்தைக் கற்றுக்கொண்டார்கள், அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன, தாங்கள் நிர்வாணமாக இருப்பதை அறிந்தார்கள், தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள் என்றான்.

60. அங்கிருந்து பூமியின் கடைசிவரை போனேன், அங்கே பெரிய மிருகங்களைக் கண்டேன், ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து வித்தியாசமாக இருந்தன. பறவைகளும் தோற்றத்திலும் அழகிலும் குரலிலும் ஒன்றிலிருந்து மற்றொன்று வித்தியாசமாக இருந்தன.

61. இந்த மிருகங்களுக்குக் கிழக்கே பூமியின் கடைசியைக் கண்டேன், அங்கே வானம் தங்கியிருந்தது, வானத்தின் வாசல்கள் திறந்திருந்தன. வானத்தின் நட்சத்திரங்கள் எப்படி வெளியே வருகின்றன என்று கண்டேன், அவை வெளியே வரும் வாசல்களை எண்ணினேன், ஒவ்வொரு தனி நட்சத்திரத்தின் வெளியீடுகளை அவைகளின் எண்ணிக்கைப்படியும் பெயர்களின்படியும் அவைகளின் பாதைகளின்படியும் நிலைகளின்படியும் காலங்களின்படியும் மாதங்களின்படியும் என்னுடனிருந்த பரிசுத்த தூதனாகிய ஊரியேல் எனக்குக் காண்பித்தபடி எழுதினேன்.

62. அவன் எல்லாவற்றையும் எனக்குக் காண்பித்து அவைகளை எனக்காக எழுதினான்; அவைகளின் பெயர்களையும் அவன் எனக்காக எழுதினான், அவைகளின் சட்டங்களையும் கூட்டங்களையும் எழுதினான்.

63. அங்கிருந்து வடக்கே பூமியின் கடைசிவரை போனேன், அங்கே முழு பூமியின் கடைசியில் ஒரு பெரிய மகிமையான காரியத்தைக் கண்டேன்.

64. அங்கே வானத்தில் மூன்று வாசல்கள் திறந்திருப்பதைக் கண்டேன்: ஒவ்வொரு வாசல் வழியாகவும் வடக்கு காற்றுகள் வீசுகின்றன. அவை வீசும்போது குளிர், கல்மழை, உறைபனி, பனி, பனித்துளி, மழை ஆகியவை உண்டாகின்றன. ஒரு வாசல் வழியாக அவை நன்மைக்காக வீசுகின்றன: ஆனால் மற்ற இரண்டு வாசல்கள் வழியாக வீசும்போது, அவை பூமியின்மேல் வன்முறையோடும் துன்பத்தோடும் வீசுகின்றன.

65. அங்கிருந்து மேற்கே பூமியின் கடைசிவரை போனேன், அங்கே கிழக்கில் நான் கண்டதுபோல மூன்று வானத்து வாசல்கள் திறந்திருப்பதைக் கண்டேன்: அதே எண்ணிக்கையிலான வாசல்களும், அதே எண்ணிக்கையிலான வெளியேறும் வழிகளும் இருந்தன.

66. அங்கிருந்து தெற்கே பூமியின் கடைசிவரை போனேன், அங்கே மூன்று திறந்த வானத்து வாசல்களைக் கண்டேன்: அங்கிருந்து பனித்துளி, மழை, காற்று வருகின்றன. அங்கிருந்து கிழக்கே வானத்தின் கடைசிவரை போனேன், அங்கே மூன்று கிழக்கு வானத்து வாசல்களைக் கண்டேன், அவைகளுக்கு மேலே சிறிய வாசல்கள் இருந்தன.


67. இந்த சிறிய வாசல்கள் ஒவ்வொன்றின் வழியாகவும் வானத்தின் நட்சத்திரங்கள் கடந்துசெல்கின்றன, அவைகளுக்குக் காண்பிக்கப்பட்ட பாதையில் மேற்கே நோக்கி ஓடுகின்றன.


68 நான் காணும்போதெல்லாம் மகிமையின் கர்த்தரை ஸ்தோத்திரித்தேன். மகிமையின் கர்த்தரை தொடர்ந்து ஸ்தோத்திரித்தேன். அவர் பெரிய மகிமையான அற்புதங்களைச் செய்தார், தூதர்களுக்கும் ஆவிகளுக்கும் மனிதர்களுக்கும் தம்முடைய


வேலையின் மகத்துவத்தைக் காண்பிக்கும்படி செய்தார். அவர்கள் அவருடைய வேலையைப் புகழும்படியாகவும், அவருடைய எல்லா சிருஷ்டிப்பையும் காணும்படியாகவும், அவருடைய வல்லமையின் வேலையைக் காணும்படியாகவும், அவருடைய கரங்களின் பெரிய வேலையைப் புகழும்படியாகவும், என்றென்றைக்கும் அவரை ஸ்தோத்திரிக்கும்படியாகவும் செய்தார்.

**முதல் புத்தகம் முற்றும்**

# பிற புத்தகங்கள்



The Book of
Common Prayer
The History and Meanings of Prayers


கிறிஸ்தவ
அரசியல்
செ.சுஜித்


விசுவாச
பதில்கள்
ஞானஸ்நானம்
ஓய்வுநாள்
யெகோவாவின் சாட்சிகள்
அந்நிய பாஷை
சுகமளிக்கும் வரம்
பேராயர் ஆளுகை
செ.சுஜித்


Christian Historical Society
Focus Series - 06
தென்னிந்திய திருச்சபை
வரலாறு
சபை ஒருமைப்பாடும் - பின்னணியும்
அலெக்ஸாண்டர்
THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA








**புத்தகங்களை தரவிறக்கம் செய்ய**

**REXMI.IN**

# மொழிபெயர்ப்பாளர்களை பற்றி



திரு. சுஜித் அவர்கள் பொது கணக்காளராக பணிபுரிந்தவர். கணக்கியல் மற்றும் மேலாண்மை பகுதி தகுதி பெற்ற இவர், பைதான் மற்றும் ஃப்ளட்டர் மென்பொருள் மேம்பாட்டில் முழு-நிலை வல்லுநராக விளங்குகிறார். தற்போது சி.எஸ்.ஐ திருநெல்வேலி திருமண்டலத்தில் சபை ஊழியராக இறையியல் படிப்பை முடித்து பணியாற்றி வருகிறார்.

திருமதி. ரெமினா சுஜித் அவர்கள் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் பட்டதாரி. மூன்று ஆண்டுகள் முன்னணி நிறுவனங்களில் VLSI வடிவமைப்பு பொறியாளராக சிறப்பாக செயலாற்றியவர். தற்போது தனது கணவருடன் இணைந்து முழுநேர ஊழியப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் இணைந்து இறைவனது ஊழியத்தை செய்து வருவதோடு, மிஷனரி மற்றும் வேதாகம புத்தகங்களின் மொழிபெயர்ப்பு பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.